ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 18 ] ப்ரபவ ஹூ, பங்குனி மீ [ஸஞ்சிகை 6

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மே௷நவத்யா

['ஸ்ரீ பாகவதம். 1-9-23]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

## திரு விருத்தத்தில் சில பாசுரங்கள்.

(ஸ்ரீ. உப. ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.)

ஆழ்வார்களுள் ப்ரதாநரும், ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரையில் முதல் ஆசார்யரும், ப்ரபந்ந ஜநகூடஸ்தருமான நம்மாழ்வார் அருளிச்செய்த நான்கு திவ்ய ப்ரபந்தங்களுள் முதலாவது திருவிருத்தம் என்னும் திவ்ய ப்ரபந்தம். திருவிருத்தம் என்னும் சப்தத்திற்கு மேன்மை யுடைய செய்தி என்பது பொருள். ஸ்ரீ ஆழ்வார், எம்பெருமானை நோக்கி, அவனுடைய ஸாக்ஷாத் அநுபவத்திற்கு விரோதியாயுள்ள ப்ரக்ருதி ஸம்பந்தத்தை நிவ்ருத்திப்பிக்க வேணும் என்று அவர் மீது தமக்கு ஜநித்திருக்கும் அன்பு மிகுதி முதலிய செய்திகளை விண்ணப்பம் செய்கையால் இதற்கு வ்ருத்தம் என்று பெயராயிற்று. இது அந்தாதித் தொடையாக நூறு பாசுரங்கள் அமையப் பெற்றது. இதன் சப்த ஸௌஷ்டவம் அர்த்த கௌரவம் முதலிய பெருமைகள் ஒப்புயர்வு அற்றன. 'இந்நூறு பாடல்களையும் கற்று

வல்லவர்கள் ப்ரக்ருதி மண்டலத்தில் அழுந்த மாட்டார்கள்' என்று இறுதிப் பாசுரத்தில் ஸ்ரீ ஆழ்வாரே அநுக்ரஹித்திருக்கிறபடி, தன்னைக் கற்பாருக்கு பிறவித் துயரறுத்து அந்தமிலின்பந் தர வல்லதன்றோ இந்த ப்ரபந்தம்?

இதன் பெருமையை எடுத்துரைக்க நாம் அதிமாத்ரம் அநதிகாரிகளே. ஆனாலும் அதிலுள்ள இனிமையால் ஆகர்ஷிக்கப்பட்டவர்களாய், நமக்கு இனியவையாகத் தோன்றும் பாசுரங்களுள் சிலவற்றை இவ்விடத்தில் ப்ரஸ்தாவிக்கத் துணிகின்றோம். அப்படித் துணிவதைப் பெரியோர்கள் க்ஷமித்தருள வேண்டும்.

"ந ஶ்வாவலீடமபி தீர்த்தம் தீர்த்ததாம் ஜஹாதி
நைதாவதாபி ச ஶ்வா கில லஜ்ஜிதவ்ய:"

[நாய் தொட்டுவிட்டது என்னும் காரணத்தால் கங்கா தீர்த்தம் அசுத்தமாகிவிடுமோ? தாஹத்தால் வருந்தும் நாயும் 'இது கங்கா தீர்த்தம்' என்று லஜ்ஜித்து விலகுமோ?]

காவ்யங்களுக்குச் சிறப்பைச் செய்யத் தகுந்தனவாகக் கூறப்படும் உத்ப்ரேக்ஷை உல்லேகம் முதலிய அணிகளும் உத்தம புருஷார்த்தத்தை ஸாதித்துக்கொடுப்பது முதலான குணங்களும் ஏராளமாக இந்த ப்ரபந்தத்தில் இருக்கையிலும், அவை யெல்லாவற்றைக் காட்டிலும், ஆழ்வாருடைய ஹார்த்தமான நைச்யாநுஸந்தாநம் நமது மநஸ்ஸை அதிமாத்ரம் ஆவர்ஜ்ஜிக்கின்றது. பின்வரும் பாசுரங்களில் காணப்படும் ஸஹ்ருதயமான பாவஸூசனைகளும் அநுரூபமாயும் அதிரஸவத்தாயுமுள்ள லோகோக்திகளும் அந்யாத்ருசங்களே.

"மெல்லிய லாக்கைக் கிருமிக்குருவின் மிளிர் தந்தாங்கே
செல்லிய செல்கைத்துலகையென் காணுமென்னாலுந் தன்னைச்
சொல்லிய சூழற்றிருமாலவன் கவியாது கற்றேன்
பல்லியின் சொல்லுஞ் சொல்லாக் கொள்வதோவுண்டு பண்டுபண்டே."*

[மெல் இயல் ஆக்கை கிருமி—தொட்டாலும் வருந்தும்படியான தன்மையுடன் கூடிய உடம்பை உடைய புழுவானது, குருவில் மிளிர்

---

* The fragile worm, showing itself in a sore, goes its way there; what does it know of the world? Even so, what do I know of the song which the great Tirumal used me to sing of Him? From old days, even lizard's chirps have been a valued word.

தந்து ஆங்கே செல்லிய செல்கைத்து—புண்ணிலே தோன்றி அவ்விடத்திலேயே செல்லுகிற தொழிலையுடையது; உலகை என் காணும்—உலகத்தை எங்ஙனம் அறியும்? (அது போல) என்னுளும் தன்னை சொல்லிய சூழல் திருமாலவன் கவி யாது கற்றேன்—மிகக் கீழ்ப்பட்ட ஜாதியையும் அறிவையும் நடத்தையையுமுடைய என்னைக்கொண்டும் தன்னைச் சொல்வித்த சூழ்ச்சியையுடைய திருமாமகள் கணவனான அவனது கவிகளை யான் யாது அறிவேன்? பல்லியின் சொல்லும் சொல் ஆ கொள்வதோ உண்டு பண்டு பண்டே—பல்லி தன்னடைவிலே செய்யும் சத்தத்தையும் தம் தமது பெரிய கார்யங்களைக் குறிக்கின்றனவாக ஜ்யோதிச் சாஸ்த்ரம் அறிந்தவர்கள் கொள்ளும் இயல்பு அநாதிகாலமாக உண்டன்றோ?]

பகவானுடைய ஸாக்ஷாத் அநுபவத்திற்கு த்வரிக்கும் ஆழ்வாரை நோக்கி, அன்பர்கள் 'நீர் இவ்விதம் த்வரிக்கலாமோ? உம்மைக் கொண்டு லோகத்தைத் திருத்தவன்றோ எம்பெருமான் உம்மை இங்கு இட்டு வைத்தது?' என்று ப்ரார்த்திக்க, ஆழ்வார் அவர்களை நோக்கி தமது தாழ்வை இந்தப் பாசுரத்தால் கூறுகிறார். எம்பெருமானிடத்து ஈடுபட்ட தம்மைப் புண்ணில் தோன்றும் புழுவுக்கு ஸமமாகக் கூறியது, 'அப்புழு புண்ணையன்றி வேறொன்றையும் எப்படி அறியமாட்டாதோ அப்படியே யானும் அந்த ஈடுபாட்டையன்றி வேறொன்றையும் அறியேன்' என்பதை விளக்கும் பொருட்டே. 'அல்பமான ஜ்ஞாந சக்திகளை யுடைய யான் உலகத்தைத் திருத்துகை யாவது என்?' என்றபடி. 'ஆனால், நீர் கவிபாட வில்லையோ?' என்னில், 'என்னைக் கொண்டு தன்னைச் சொல்வித்துக் கொண்ட எம்பெருமானது கவிகளே அவை; யான் ஒன்றையும் அறியேன்' என்கிறார். 'அவன் முன்னுருச் சொல்லிக்கொண்டு போக நான் பின்னுருச் சொல்லிக் கொண்டு வந்த அவ்வளவே; நான் என்னுணர்வால் அறிந்து கவிபாடினேனல்லேன்' என்பது அவர் அந்தரங்க திருவுள்ளம். ஆனால், 'நீர் பாடின கவியென்று எல்லாரும் கொள்ளுகின்றனரே!' என்ன, 'பல்லியின் சத்தத்தையும் ஜநங்கள் நிமித்தமாகக் கொள்ள வில்லையோ?' என்கிறார். 'யான் பரதந்த்ரமாய்க் கூறும் சொல்லையும் எனது இழிவு பாராது யாவரும் அங்கீகரிக்கிறார்' என்று தமது விநயத்தாற் கூறினரென்க. 'எம்பெருமானைக் கவி பாட வேண்டும்' என்னும் எண்ணத்துடன் ஆழ்வார் இக் கவி பாடவில்லை; ஆனால், அவர் தன் வசமிழந்து பக்தி வசப்பட்டுப் பாடினார் என்பதை நாம் மறக்கக் கூடாது. ஆழ்வாருடைய திருவுள்ளத்திலும் நாக்கிலும் எம்பெருமான் நின்று கொண்டு அவரை ப்ரவ்ருத்தித்தான் என்பதும் உண்மையே. நிமித்தமாத்ரமன்றோ ஆழ்வார் ப்ரப்ருதிகள்?

பல்லியின் சொல்லை நிமித்தமாகக் கொள்ளுதல் தொன்று தொட்டு வரும் மிகப் பழமையான மரபு. திருமங்கை யாழ்வார், தமது பெரிய திரு மொழியில்,

"கொட்டாய் பல்லிக்குட்டி
குடமாடி யுலகளந்த
மட்டார் பூங்குழல் மாதவனை வரக்
கொட்டாய் பல்லிக்குட்டி" [10—10—4.]

எனத் தலைவி தலை மகன் வரவு கூறும்படி பல்லியை வேண்டியதாகப் பாடினமை காண்க.

தமது இழிவையும் 'அவன் காதலிலே அகப்பட்ட யான் அதனையே யன்றி மற்றொன்றையும் கருதுவேனல்லேன்' என்னும் தமது ஸ்வபாவத் தையும் புலப்படுத்தற்குப் புழுவை உவமை கூறுவது உண்டு. கீழ்ச் சொல் லிய பெரிய திருமொழியிலே

"வேம்பின் புழு வேம்பன்றி யுண்ணாது அடியேன்
நான் பின்னுமுன் சேவடியன்றி நயவேன்" [11—8—7.]

என்று பாடியிருப்பதையும் காண்க.

உண்மையாகவே, பகவானுடைய எல்லை யில்லா நீர்மையானது அநு ஸந்தாநம் செய்யப்படும்பொழுது, பக்தோத்தமர்களுக்கும் தமது இழிவு மிகப் பெரியதாகத் தோன்றுமன்றோ? சதுஸ்ஸாகர பர்யந்தமான பூமியெல்லாம் ப்ர ஸித்தமாயுள்ள புகழை யுடைய ஸ்ரீவைஷ்ணவர்களின் வம்சத்தில் பிறந்து, ஸ்வயமே பரம பக்தி ஸம்பந்நராக ஸ்ரீமந் நாராயணனைச் சரணமாகப் பெற்றி ருக்கையிலும், தாம் எம்பெருமான் எடுக்க நினைத்தாலும் கைக்கெட்டாதபடி ப்ரக்ருதியில் ஆழ நிற்பதாகவும் அதற்குக் காரணமாய்த் தம்மிடத்தில் ப்ர சுரங்களான பாபங்கள் இருப்பதாகவும் நினைத்து, ஸ்ரீ ஆளவந்தார்,

"𑌅𑌮𑌰𑍍𑌯𑌾𑌦𑌃 𑌕𑍍𑌷𑍁𑌦𑍍𑌰𑌶𑍍𑌚𑌲𑌮𑌤𑌿𑌰𑌸𑍂𑌯𑌾𑌪𑍍𑌰𑌸𑌵𑌭𑍂𑌃
𑌕𑍃𑌤𑌘𑍍𑌨𑍋 𑌦𑍁𑌰𑍍𑌮𑌾𑌨𑍀 𑌸𑍍𑌮𑌰𑌪𑌰𑌵𑌶𑍋 𑌵𑌞𑍍𑌚𑌨𑌪𑌰𑌃 ।
𑌨𑍃𑌶𑌂𑌸𑌃 𑌪𑌾𑌪𑌿𑌷𑍍𑌠𑌃"

[வேத மர்யாதைக்குப் பஹிர்பூதனானேன்; நீச விஷயங்களில் அதிசபல னானேன்; யாராவது ஹிதம் சொல்லில் அதில் வ்யவஸ்தித சித்தனல்ல னானேன்; பிறர்குணங்களில் தோஷத்தை உண்டாக்குகிறவனானேன்; உபகரி த்த விஷயத்திலே அபகாரத்தைப் பண்ணுகிறவனானேன்; இப்படி இருக்கச் செய்தேயும் என்னை ஸர்வோத்க்ருஷ்டனென்று நினைக்கிறவனானேன்; காம

னுக்குப் பாதந்த்ரனுகவும், காம விஷயங்களில் த்ரவ்யங்களை வஞ்சித்து வர்த்திக்குமவனுகவு மானேன்; விச்வஸித்தார் பக்கல் க்ரூர கர்மாவாகவானேன்; ‘பாவமே செய்து பாவியானேன்’ என்கிறபடி பாபத்திலேயே நிஷ்டையுடையவனுனேன்] என்று தம்மை அநுஸந்தித்து வருந்திஞர். ஸ்ரீ கூரேசனும்,

“ ஹுொஜூி ஙிம் ஜூி யஹஸெ ஶவயெஷ நீதொ
உஷாவஉஹ உமஃஜொஶயஃயூோநஃ ।
விஉஜாயநா ஹிஜநஜாஜெஉநக்ஷாஃ
ஞேூரயாஓிஹிஸு ஹதஹீ நஉ ஶஃ வஜயாஓி ॥ ”

என்று தம்மை இந்த்ரிய பரவசராகவும் வித்யாதிகளால் ஜநிக்கும் மதமடைந்தவராகவும் க்ரோதம் அஸூயை மாத்ஸர்யம் முதலிய கெட்ட எண்ணங்களால் நிறைந்தவராகவும் நினைத்துத் தம்மை வெறுத்துக்கொண்டார். இவையெல்லாம் அஹ்ருதயமாகச் சொன்ன வார்த்தைக ளல்ல.

மற்றும் ஒரு பாசுரத்தில் ஆழ்வார், எம்பெருமானை அநுபவித்தற்கு விரோதியான தமது பாப ப்ராசுர்யத்தையும் அப்பாபத்திற்கு இடமான தம்மையும் நொந்து, ‘இப்படியே யிருப்பதொரு பாபம் உண்டாவதே! அதை அநுஷ்டிக்கைக்கு நான் உண்டாவதே!’ என்று மிகவும் வெறுத்துக்கொள்வதைப் பார்க்கலாம்.

“இருக்கார் மொழியா னெறியிழுக்காமை யுலகளந்த
திருத்தாளிணை நிலத்தேவர் வணங்குவர் யாமுமவா
வொருக்கா வினையொடு மெம்மொடு நொந்து கனியின்மையிற்
கருக்காய் கடிப்பவர் போற்றிருநாமச் சொல்கற்றனமே.” *

[நிலம் தேவர் இருக்கு ஆர் மொழிபால் நெறி இழுக்காமை—ப்ராஹ்மணோத்தமர்கள் அஷ்டாக்ஷர மந்த்ரத்தைக் கொண்டு பெருமானை வழிபடும் முறைமையில் ஒன்றும் வழுவாமல், உலகு அளந்த திருதாள் இணை வணங்குவர்—ஸர்வ ஸுலபமான திருவடிகளை வணங்கி அநுபவிப்பார்கள்; யாமும் அவா ஒருக்கா—நாமும் நமது ஆசையை அடக்க மாட்டாமல், வினையொடும் எம்மொடும் நொந்து—எம்பெருமானைக் கலந்து அநுபவிக்கப் பெருத ப்ரதி பந்தகத்தையும் அதற்குப் பாத்ரமாயுள்ள நம்மையும் வெறுத்

* Great Brahmin devotees offer worship as prescribed in Vedic hymns to the sacred feet of Him who strode the world. I too, with my passion untamed and with grief at my past deeds and at myself, just repeat His sacred names, like one, who, lacking ripe fruit, eats a fruit that is unripe.

துக் கொண்டு, கனி இன்மையின் கருக்காய் கடிப்பவர் போல்—பழங் கிடைக்காமையால் இளங் காயைத் தின்பவர் போல, திருநாமம் சொல் கற்றனம்—திருப் பெயர்களாகிய சொற்களைச் சொல்லுதல் செய்கிறோம் ]

'எம்பெருமானைக் கண்ணாலே கண்டு கையாலே அணைக்க ஆசைப்பட்டவர் அவன் பெயரைக் கொண்டு என் செய்வர்?' என்பது குறிப்பு. பகவதநுபவத்தால் வரும் இனிய ஆநந்தம், மிக முதிர்ந்து இனியதாயிருக்கும் கனியின் ஆஸ்வாதத்திற்குத் துல்யமாகவும் அந்த அநுபவமில்லாத நாமோச்சாரணம் பசுங்காயைப் புஜிப்பதற்குத் துல்யமாகவும் பேசப்பட்டிருக்கின்றன. எம்பெருமானுடைய திருநாமங்களைத் தாமே சொல்லியும் பிறரைச் சொல்லச் சொல்லிக் கேட்டும் பக்தோத்தமர்கள் உயிர் வாழ்தலுண்டு. திருநெடுந் தாண்டகத்தில் பின்வருமாறு பாசுரங்களைக் காணலாம்.

"சொல்லெடுத்துத் தன்கிளியைச் சொல்லே யென்று" [13

"..................திருமாலைப் பாடக்கேட்டு
வளர்த்ததனாற் பயன் பெற்றேன் வருக வென்று" [14

மற்று மோரிடத்தில், ஆழ்வார், 'விலக்ஷணரான வைதிகர்களே எம்பெருமானை உள்ளபடி அறிந்து சொல்லவல்லார் ; நான் அவர்கள் போன வழியே போவது மாத்ரத்துக்கே உரியன்' என்று தம்மை இகழ்ந்து பேசிக் கொள்ளுகிறார்.

"மைப்படி மேனியுஞ் செந்தாமரைக் கண்ணும் வைதிகரே
மெய்ப்படியானுன் றிருவடிச் சூடுந்தகைமையினா
ரெப்படி யூரா மிலைக்கக் குருட்டாமிலைக்குமென்னு
மப்படியானுஞ் சொன்னே னடியேன் மற்றியாதென்பனே."*

[மை படிமேனியும் செம்தாமரை கண்ணும் உன் திரு அடி—கண்டார் கண்கள் குளிரும்படியான அஞ்ஜநத்தின் வடிவு போலே இருக்கிற திரு மேனியையும் சிவந்த தாமரை மலர்போலே இருக்கிற திருக்கண்களையு முடைய உனது திருவடிகளை, வைதிகரே மெய் படியால் சூடும் தகைமையினார்—வேதத்திற் சொல்லுகிறபடி அறியுமவர்களே உண்மையான நெறியால் தம் தலைமேற்

* None save those who are versed in Vedic lore and lead a pious life are fit to touch with their heads thy sacred feet, O Thou, with charming black body and with red lotus-like eyes! If I have dared to sing thy praise, it is only after the fashion of the blind cow which bellows hearing the other village cows bellowing. What else can a slave like me say?

கொண்டு அநுபவிக்கும் தன்மை யுடையவர்கள் ; எ படி ஊர் ஆ மிலேக்க குருடு ஆ மிலேக்கும் என்னும்—எப்படி ஊர் புக்கு அணைந்த பசுக்கள் நிலே கண்டு மகிழ்ந்து கனேக்கக் கண்ணில்லாத பசுவும் அது கேட்டுத் தான் இன்ன தென்றறியாமலே ஒக்கக் கனேக்குமோ, அ படி யானும் சொன்னேன்—அப் படியே நானும் சொன்னேன் ; அடியேன் மற்று யாது என்பன்—அப்படிச் சொல்லுதற்கு அடியான ஸம்பந்தமுடையவனும் பக்தி பரவசப்பட்டவனு மான் நான் வேறு என்னவென்று சொல்வேன் ? என் ஜ்ஞாநத்தாலே கண்டு என் சக்தியாலே சொன்னே னென்ன வல்லேனோ ? என்பது தாத்பர்யம்.]

ஸ்ரீ கூரேசன் தமது அதிமாநுஷஸ்தவத்தில்,

“ வெ௱ாஐா உ௱ுவிஹுமிர: வ⁻ர⁻ஷா: வ⁻ராணா
ஸ்வாம் த⁻ஷ⁻வ⁻ உ௨ய⁻ரிவொ உய⁻ரெவ௨ஜொஹி: ।
வாஜொ விஜம்ஜி தவிஷம் ௨௨ நீஅவாஅ: ”

[ஹே மது ரிபோ ! பகவத் யாமுந முநி ப்ரப்ருதிகள், பக்த்யதிசயத்தால் உன்னே உள்ளபடி அறிந்து மிகவும் இனிமையான சொற்களால் ஸ்தோத்ரம் செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட பக்தியொன்று மில்லாமலிருக்கும் நானும் அவர்களுடைய வாக்கை அநுகரித்து என்னுடைய அஹ்ருதயமான சொற்களேக்கொண்டு உன்னே ஸ்தோத்ரம் செய்யத் துணிகிறேன்] என்று புராண புருஷர்கள் புத்தி பூர்வகமாக அறிந்து செய்த கார்யத்தைத் தாம், தமது ஆர்த்தியின் சாந்தியின் பொருட்டு, மெய்யானபடி அறியாமலே அநு கரிப்பதாக அநுக்ரஹித்திருக்கிறார். அப்படி அநுகரிப்பதையும் அதிவத் ஸலனன எம்பெருமான் திருவுள்ளம் பற்றுவனன்றோ ?

ஆழ்வாருடைய நைச்யாநுஸந்தாநம் இவ்வாறு நிற்கின்றது; அவருடைய அநுபவ மஹிமையைச் சற்று பார்ப்போம். ஓரிடத்தில், பாகவத ஸம்ஸர்க்கத்தில் தமக்கு இருக்கும் ஔத்கண்ட்யத்தை லோகாநு பவத்தை அநுஸரித்து, அசாத்ருசமான ஒரு ரீதியில் விவரிக்கிறார். அன்பரைக் கூடிய நிலேயில் காலங் கழிவது தெரியாமல் இருப் பது லோகாநுபவ ஸித்தம். “ அவிஜிதமதயாஜா ராத்ரிரெவ வ்யராம ஸீக ” [காலம் போனது தெரியாமல் இரவு கழிந்ததே தவிர நமது பரி மாற்றங்கள் முடியவில்லே] என்று பிராட்டியுடன் கூடிய நிலேயை ஸ்ரீ சக்ர வர்த்தித் திருமகனும் வெளியிட்டிருக்கிறார். இது, அன்பருடைய கூட்டத் தால் ஜநிக்கும் இன்பச் சிறப்பைக் கூறினதாகும். பாகவதரைக் கூடிய நிலே யில் காலம் அத்யல்பமாகவும், அவர்களேப் பிரிந்த நிலேயில் அது மிகப் பெரி

யதாகவும் தோன்றுவதைப் பார்த்து இருவகையிலும் தாம் படுகிற தளர்ச்சியை, ஆழ்வார், தமது அன்பருக்குப் பின்வருமாறு கூறுகிறார்.

"பல பல வூழிகளாயிடுமன்றியோர் நாழிகையைப்
பல பல கூறிட்ட கூறாயிடுங் கண்ணன் விண்ணனையாய்
பல பல நாளன்பர் கூடிலு நீங்கிலும் யாமெலிதும்
பல பல சூழலுடைத்தம்ம வாழியிப்பாயிருளே." *

[கண்ணன் விண்ணனையாய்—எம்பெருமானது பரமபதம் போல அளவிடப்படாத மஹிமையையும் என்றும் வேறுபாடு இல்லாத இயல்பையுமுடையவரே, பல பல ஊழிகள் ஆயிடும்—கலை காஷ்டை முதலியவற்றால் இனிக் கூறிடவொண்ணாதென்னும்படி கூறிட்ட கூறும் அன்பரைப் பிரிந்த நிலையில் பல அவாந்தர கல்பத்தை உடைத்தான மஹா கல்பங்கள் ஆகாநிற்கும்; அன்றி ஓர் நாழிகையை பல பல கூறு இட்ட கூறு ஆயிடும்—பல பல ஊழிகளும் அன்பரைக் கூடிய நிலையில் ஓர் நாழிகையைப் பல பல கூறிட்ட கூறாயிடும்; பல பல நாள் அன்பர் கூடிலும் நீங்கிலும் யாம் மெலிதும்—இருவகையிலும் நாம் வருந்துகிறோம். இ பாய் இருள் பல பல சூழல்உடைத்து—இந்தப்பரந்த இருட்பொழுது நெடுகைக்கும் குறுகைக்கும் பல பல உபாய முடையதாயிரா நின்றது. அம்ம வாழி—அந்தோ! இது வாழ்ந்திடுக! தாம் நினைத்த வடிவு கொள்ள சக்தமான காலத்தின் தன்மையை வியந்து நொந்தபடி.] அன்பரிடம் வைக்கும் அன்பின் பெருமையன்றோ இது? 'அன்பர் என்று, பிரிந்து தரித்திருக்கப் போகாமையைச் சொல்லுகிறது' என்பது பூர்வாசார்யர்களின் உரை.

"ஸம்ஸ்ருஜ்யதே யதி ச தாஸஜநஸ் த்வதீயை:
ஸம்ஸார ஏஷ பகவந்நபவர்க்க ஏவ"

[ஹே பகவந்! உன்னுடைய தாஸ ஜநங்களின் நீங்காத ஸம்ஸர்க்கம் லபித்தால், அநந்த துக்கங்களால் நிறைந்துள்ள இந்த ஸம்ஸாரமும் அபவர்க்கமாகிவிடு மன்றோ?] என்று பாகவத ஸம்ஸர்க்கத்தின் ருசியை உணர்ந்த மஹாந் அநுக்ரஹித்திருப்பதைக் காண்க.

---

* O thou, great and sweet as Kannan's heaven! when He is away, what ages long does time appear! when He is near, how short! Whether friends stay or go for many days, we grieve. This spreading darkness of time has many a cunning trick; blest be it!

ஸ்ரீ:

# கம்பர்.

(திரு. அ. இராமகிருஷ்ண சடகோபதாஸர்.)

[18-ம் ஸம், 144ம் பக்கத்தின் தொடர்ச்சி.]

இவ்விடத்தில்,

1. " இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந் தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே!
ஒன்றுநீ யல்லை அன்றியொன் றில்லை;
யாருன்னை யறியகிற் பாரே !!"

2. " உணர்வி லும்ப ரொருவனை யவன தருளா லுறற்பொருட்டென்
உணர்வி னுள்ளே யிருத்தினே னதுவு மவன தின்னருளே
உணர்வு முயிரு முடம்பும்மற் றுலப்பி லனவும் பழுதேயாம்
உணர்வைப் பெறவூர்ந் திறவேறி யானுந் தானா யொழிந்தானே.

என்ற செய்யுள்களையும் அவற்றின் பொருள்களையும் அறிக. ஈண்டுக் கூறின் வியாசம் மிக விரியும். இவ்விஷயத்தை இத்துடன் விரிவஞ்சி நிறுத்துகின்றோம். அறிவுடையோர் இதனைப் பெருக்கி உணர்ந்துகொள்க.

இத்தகைய தொரு நுண் உணர்வைக் கொண்டு வாழ்ந்தருளிய கவிஞர் பெருமானாகிய கம்பர் விசிஷ்டாத்துவித தத்துவக் கொள்கையை உடையவர் என்றே அறிதல் வேண்டும்.

இனி இவர் வைஷ்ணவ மத சித்தாந்த உணர்ச்சி உடையோரா என்பதைப் பற்றி ஆராய்வாம்.

---

1. திருவாசகம் : கோயிற் றிருப்பதிகம். செ. 7
2. திருவாய்மொழி : 8-8-3. இப்பதிகம் முழுதும்மே ஈண்டு அநுசந்திக்கத் தக்கது.

'கம்ப நாடர்' பத்திரிகாசிரியரான திரு. கோவிந்தராஜ அய்யங்கார், "அன்றி, ஒரு மதப் பற்றுடையவராக இருப்பின், அம்மதத்துக்குரிய—அம் மதா சாரியர்கள் சிறப்பித்துச் சொல்லியுள்ள—சில சிறப்புக் கொள்கைகளையா வது, தத்துவங்களையாவது காட்டியிருக்கலாமே; அத்தகைய சிறப்பு மத விஷயங்கள் ஒன்றும் கம்ப ராமாயணத்திற் காணப்பட வில்லை யென அறிகி றோம்." என்று எழுதியிருக்கின்றார். இவ்வசனங்கள் எம் கருத்துக்கு இணங்கவில்லை. இவர் ஸ்ரீ வைஷ்ணவராய் இருந்தும், இங்ஙனம் எதற்காகக் கூறினாரோ தெரியவில்லை. ஒரு மதாசார்ரியர், தம் மதச் சிறப்புக் கொள்கை களை யாதல், தத்துவங்களை யாதல் கொண்டால், அம்மதாசாரியரைப் பற்றி யேனும் தழுவியேனும் நிற்போர், அவரது போக்கைத் தழுவியே நூல் இயற்றுவர் என்பது யாவரும் அறிந்ததே. தமிழ் நாட்டில் வைஷ்ணவ மத சித்தாந்த உணர்ச்சி, கம்பர் காலத்துக்கு முன்பு அவ்வளவாகப் பரவ வில்லை. கம்பரோடிருந்த ஸ்ரீமந்நாத முனிகளின் காலத்திலேதான் அது நன்கு விரிந்து பரவலாயிற்று. சங்க காலத்திலே ஆகம சித்தாந்த உணர்ச்சி இல்லா மற் போகவில்லை; தீவிரமும் வைராக்கியமு மான ஒருவகை உணர்ச்சி மட்டில் அப்போது கிடையாது. ஸ்ரீமந்நாத முனிகள் காலத்தில்தான், அது மதாபிப் பிராய வேற்றுமைகளால் வலுவினை அடைந்தது. (10,11,12-ம் பக்கங்களைப் பார்க்க). பழைய ஒற்றுமைத் தன்மையையும், அதாவது, சங்ககாலப் புலவர் களுக்குள் இருந்த சமரச சமப உணர்ச்சியினையும், தங் காலத்து வழங்கிய சித்தாந்த உணர்ச்சியினையும் கம்பர் அநுசரித்தவரே யாவர்; கம்பர் துவேஷம் பாராட்டாத ஒரு வைஷ்ணவரே. ஸ்ரீமந்நாதமுனிகளின் பெயரை அவர் குறிக் காமல் விட்டனரேனும், அவரது கருத்தை அநுசரித்த சித்தாந்த அறிவை யும் பெற்றுத் தான் இராமாயணம் பாடினார் என்று ஏற்படுகின்றது.

வைஷ்ணவசித்தாந்திகள் கூறும் ஈசுவரனது ஐந்துவித நிலை, அஷ்டா க்ஷர மந்திர ஜெபம் முதலியவற்றில் கம்பர் ஈடுபட்டவ ரென்றே தெரி கின்றது. சிறப்புப்பாயிர முதல் மூன்று செய்யுட்களில், ஸ்ரீமந் நாராயண னது பரத்துவத்தைக் கூறுகின்றார். இந்த மூன்று செய்யுள்களும், திருவாய் மொழி முதல் இரண்டு பத்தும், வேதாந்த சூத்திரங்களோடு பொருந்து மாற்றை அவ்வவற்றின் வியாக்கியானங்களைக் கொண்டறியலாம். 1. "முப்ப ரம் பொருளுக்கு முதல்வன் வைகுறும்" என்றதில், முப்பொருள் என்பது மூன்று பொருள்களாகிய, பிரத்தியும்னன், அநிருத்தன், சங்கருடணன் என் னும் வியூஹ மூர்த்திகளுக்கு முதல்வனான பரம்பொருள்' என்று பொருள்

கம்ப நாடர் பெய்கை. 1 பக்கம் 20.

1. கம்ப.ராமா. திருவவதாரப் படலம் செ. 137.

படும் அப்பொருளே பரவாசுதேவன் என்பது. 2 'முப்பரம் பொருளிற் குண் முதலை' என்றதூஉம் அது. சங்க எட்டுத்தொகையில், ஒரு நூலாகிய பரிபாடலில்,

3. "செங்கட் காரி கருங்கண் வெள்ளை
பொன்கட் பச்சை பைங்கண் மாஅல்"

எனவரும் அடிகளினும் இவ்வுண்மை கூறப்பட்டமை காண்க. [கருங்கண் வெள்ளை—சங்கருடணன்; பொன்கட் பச்சை—பிரத்யும்நன் ; பைங்கண்மாஅல்—அநிருத்தன். அனிருத்தன் விஷ்ணு; பிரத்தியும்னன்—பிரமன்' சங்கருடணன் சிவன் என்றறிக. பரிமேலழகர் உரையோடுகூடிய இதனை "எமது சமயம்" என்னும் ஆராய்ச்சி நூலில் விளக்கிவருகின்றோம்.] கம்பருக்குப் பல்லாண்டுகளுக்கு முன்பே—அதாவது சங்க காலத்திலும், வைஷ்ணவாகம சித்தாந்த உணர்ச்சி தமிழ் நாட்டிலே பரவி இருந்தது.* சங்க காலத்திற்குப் பிறகு தமிழ் நாட்டில் பல மாறுதல்கள் (Religious and Literary revolution) உண்டாகவே, இவ்வுணர்ச்சி அமிழ்ந்து போய், ஸ்ரீமந் நாத முனிகள் காலந் தொடங்கிக் கொஞ்சங் கொஞ்சமாக வலிமையை அடைந்து, ஸ்ரீமத் ராமாநுஜாசாரியர் காலத்திலே சரியான பலத்தைப் பெற்று வேரூன்றி விளங்கியது. இராமாநுஜாசாரியர்க்கு முன்பு இருந்த கம்பர், ஸ்ரீமந் நாத முனிகளுடைய சித்தாந்தத்தை உணர்ந்து சமரசமாக இருந்தார் என்று ஏன் சொல்லக் கூடாது? அச்சித்தாந்தத்தை உணர்ந்ததனாலன்றோ, இறைவனுடைய பரத்வ வியூஹங்களைக் கூறினர்: இறைவனுடைய விபவாவதாரமாகிய ஸ்ரீராமனுடைய பிரதாபத்தைக் கம்பர், "இராமாவதாரம்" என்று பெபரிட்டுக் கூறினமையாலும், நரசிம்மன் வாமனன் கண்ணன் முதலிய அவதாரங்களைப் பற்றியும் தம் நூலில் இடையிடையே கூறிச் செல்வதாலும், இறைவனது இந்த மூன்றும் நிலையையும் தழுவினவர் என்க.

1. உலகுதந் தானும் பல்வே றுயிர்கள்தந் தானும் உள்ளுற்
றுலைவிலா வுயிர்கள் தோறும் அங்கங்கே உறைகின் றானும்

---

2. ,, கடிமணப் படலம் செ. 69.

3. பரிபாடல்; கடுவனிளவெயினனார் பாட்டு 3-ம் பாடல்; அடிகள் 81, 82.

* *Vide the lines* :—"The Agamic work of the Pancharatrams alike had reached and had attained in the distant South (Madura) in the early centuries of the Christian Era." S. Krishnasami Aiyangar's Early History of Vaishnavism. P. 91.

1. கம்ப. ராமா. இரணியன் வதைப்படலம் செ. 120

மலரினில் வெறியும் எள்ளில் நெய்யுமாய் வழுத்தல் ஒல்லா
அலகில்தொல் புகழும்பற்றி முற்றிய அரிகா ணத்தா !''

என்ற செய்யுளிலே, இறைவன், ஒவ்வோர் உயிர் தோறும், சராசரங்கள் தோறும், ஊடுருவி நிற்பதாகிய அந்தர்யாமித்வத்தைப்பற்றிக் கூறுகின்றார். அந்தர்யாமித்வமாவது, ஆத்மாக்களுள்ளே வியாபித்து அகில ப்ரவர்த்தி களுக்கும் நியந்தாவாய் இருத்தலாம். இதனை மேலே கம்பர் எவ்வளவு எளி தில் கூறுகின்றார் பாருங்கள். இதனால் இறைவனது இந்நான்காம் நிலையையும் தழுவிக் கூறுகின்றார். இனிக் கம்பர் இறைவனுடைய அர்ச்சாவதார ஸ்வ ரூபத்தையும் அநுஷ்டித்து வழிபடுகின்றார். இறைவன் பல இடங்கள் தோறும் கோயில்கொண் டெழுந்தருளிய விஷயமாகக் கம்ப ராமாயணத்தில் செய்யுள்கள் இலவேனும், "கண்ணிய அரங்கர் முன்னே" என்று அர்ச் சாவதார விஷயமான புறச்சான்று இருப்பதாலும், அர்ச்சா ரூபியான கடவுள் முன்னே 'இராமாயணம்' அரங்கேற்றப்பட்டமையாலும், கம்பர் கோயில் தோறும் சென்று அர்ச்சாரூப சேவையைக் கண்டு வழிபடூஉங் கொள்கையை உடையோர் என்றுணர்க.

அதுவேயுமன்றி, கம்பர் திருமண்காப் பணிந்தோர் என்பதற்கு, பால காண்டம், கடிமணப்பலம் 49ம் செய்யுளும், அவர் அஷ்டாக்ஷர மந்திர ஜெபம் உடையோர் என்பதற்கு உயுத்த காண்டம் இரணியன் வதைப்படலம், 23, 42, 43-ம் செய்யுள்களும் போந்த சாட்சியங்களாய் இருத்தலின், அவர் பாஞ்சராத்திரம் முதலிய வைஷ்ணவாகமங்களையும் உடன் தழுவிய சித்தா ந்த உணர்ச்சியுடையவரேயாம். நாலாயிர பிரபந்த வியாக்கியான கர்த்தாக் கள் சிலர், தம்முடைய உரையிலே, கம்பரது அரிய பிரயோகங்களைப் பெய் திருப்பதையும் காணலாம். வைஷ்ணவ சம்பிரதாயப்படி, பரமபதத் தியலை அருளிப் போந்த,

1. "குறுகா நீளா இறுதிகூடா எனையூழி
சிறுகா பெருகா அளவில் இன்பம்................" என்ற அடிக ளோடொக்கக் கம்பரும்:

2. "சிறுகாலையிலா நிலையோ திரியா
குறுகா நெடுகா குணம்வேறு படா
உறுகால் கிளர் பூதமெலா முகினும்.
மறுகா நெறி.................................." என்று

---

1. திருவாய்மொழி: 6, 9, 10.
2. கம்ப. ராமா. ஆர. காண்டம். சரபங்கர் பிறப்பு நீங்கு படலம். செ. 20.

கூறியதூஉங் காண்க. வைஷ்ணவ சம்பிரதாய முறைமைப்படி, இவர் நாட்டரசன் கோட்டையிலே சமாதி செய்யப்பட் டிருக்கிறதையும் இன்றளவுங் காணலாம். இவ்வளவுங் கூறியது கொண்டு ஸ்ரீ கோவிந்தராஜ அய்யங்கார் உரை பொருந்தாமையை உணர்க.

இனிக் கருவிலே திருவுடையராய் ஞானப்பால் அமுது செய்தருளிய சடகோபாழ்வார்,

1. " கற்பார் இராமபிரானை யல்லால் மற்றுங் கற்பரோ
புற்பா முதலாப் புல்லெறும்பாதி யொன்றின்றியே
நற்பா லயோத்தியில் வாழுஞ் சராசரம் முற்றவும்
நற்பாலுக் குய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே"

என்று அருளிய பாடலிலே போந்த பொருட்சுவை மிகவும் அருமையும் ஆழமுமானது. ஸ்ரீ ராமபிரான் அன்றி வேறு எவரும்—மக்களாயினும், தேவராயினும்—குணங்களிற் சிறந்தோர் ஆகார். பரமாத்துமாவான ஸ்ரீமந் நாராயணனே அவர் ஆதலின், அவனை அறிந்து அவன்றன் கல்யாண குணங்களில் ஈடுபட்டோர் பிறரை நாடிக் கற்பரோ ? பிறர் மாட்டும் அன்னோர்க்கு இச்சையும் செல்லுமோ ? என்பது அவரது (ஆழ்வாரது) திருவுள்ளக் கருத்தாம். இதனால் அன்றே குலசேகரப் பெருமானும், தசரதன் புலம்பலாக அருளி யிருக்கும் பதிகம், வலிய கருங்கல்லும் கரைந்து அக்கணமே உருகும்படியான சோகரசத்தில் அமைந்துளது. இப்பதிகத்திற் காணப்படும் அருமையும், ஆழமும், உருக்கமும் மிகவும் வியக்கற்பாலனவே. இதனைப் போன்ற அவ்வளவு உருக்கமான பதிகங்கள் சிற்சிலவே. பிற சமயத்தினரும் இப்பதிகத்தைப் புகழ்ந்து எழுதியுள்ளார். ஸ்ரீராமனிடத்தில் தசரதனுக்கு எவ்வளவு பற்றுதலும் அன்பும் உண்டோ, அவ்வளவும் குலசேகரப் பெருமானுக்கும் உண்டு. இப்பதிகத்துப் பத்துப் பாடல்களின் அருமையை ஆழ்வார் (சடகோபர்) எளிதில் ஒரே அடியில் காட்டுகின்றார். இதனை உணர்ந்து ஈடுபட்டதினாற்றான் கம்பர் ஸ்ரீராமனது அனந்த திவ்விய குணங்களில் ஆழ்ந்தவராய்க் காணப்படுகின்றார்.

அதுவேயுமன்றி, * ருக்வேதம் 6-வது அஷ்டகம், ஸ்ரீராம பாதத்துவ நிர்ணயோபநிடதம், சுக்ல எஜுர்வேதம் எட்டாவது சதகத்துள்ள ஸ்ரீராம பிரமோபநிடதம், முத்திகோபநிடதம், முதலிய வடமொழி

1. திருவாய்மொழி, 7, 5, 1.
2. ஞானசாகரம், 12-ம் பதுமம், பக்கம் 373, வரிகள் 23முதல் 26 வரை பார்க்க
* இவற்றிலே சொல்லப்பட்ட விஷயங்களை இங்கே கூற இடமில்லை. அந்நூல்கள் கொண்டறிக.

நூல்களிற் கூறப்பட்ட ஸ்ரீராம ப்ரபாவத்தையும், அவதார மஹிமையையும் நன்காய்ந்துணர்ந்த கம்பர், ஸ்ரீராமனையே, சிறந்த முழுமுதற் பொருளாகிய பரதத்துவ உண்மைப் பெரும்பொருள் எனக் கொண்டார்.

இதுவரைக்கும், தக்க ஆராய்ச்சியோடு கூறிவந்தது கொண்டு, கம்பர் விசிஷ்டாத்துவித சுத்த சமரச வைஷ்ணவ சித்தாந்த வைதிகஉணர்ச்சியுடைய மஹா பாகவேதாத்தம சிரோமணியாய், வடமொழி தென்மொழிகளில் உள்ள எல்லா நூல்களேகளேயும் ஓதி உணர்ந்த மாப்பெரும் நல்லிசைப் புலவராய்,—கவிச்சக்கவர்த்தியாய்—தங்காலத்திலே இருந்த மக்களுக்கு, வேதவேதாந்த அறிவு நூல்களின் பொருளைப் போதிக்க வேண்டியும், வைஷ்ணவமும் வைஷ்ணவ சமூஹமும் என்றும் அழியாவகை நிலைக்கவேண்டியும், ஸ்ரீராமபிரானது திருவருள்கொண்டு, இராமாயணம் பாடி முடித்துக் கைம்மாறு கருதாதபேர் உதவியைச் செய்தருளினர் என்றுணரற்பாற்று. இவ்வாறு சுருக்கமாக உரைத்தாம். விரிப்பின் பெருகும்.

திருக்குருகூர் அடிகள் திருவடி வாழ்க.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீநரஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# சாஸ்த்ரமும் அதன் ப்ராமாண்யமும்

(வேதாந்த சிரோமணி தோட்டாலம் வேணுகோபலாசார்யர்.)

‘மாநாதீநா மேயஸித்தி:’ என்று வடமொழியோர் கூறுவர். அதாவது: யார் எதைச் சொன்னபோதிலும்‘நீ அதை எப்படி அறிந்தாய்?’ என்று வினவினால், நேரில் கண்டதாலோ அல்லது யுக்திகளைக் ப்ரமாணங்கள் கொண்டறிந்தோ அல்லது ஒருவன் சொல்லைக் கேட்டோ மூன்றே என்கிற இம்மூன்றி லொன்றையே ஸமாதாநமாகக் கூற வேண்டியிருக்கின்றது. விஷயங்களை யறியக் காரண மாதலால் இவைகளுக்கு ப்ராமணங்கள் என்கிற பெயர் வழங்கலாயிற்று. இவற்றால் ப்ரத்யக்ஷம் அநுமாநம் சப்தம் ஆகிய இவைகளைக் கொண்டே யாவு மறியப் படுவதால் இவைகளைத் தவிர்த்து வேறு ப்ரமாணம் அவச்யமில்லை யென்றும் சொல்லலாயிற்று. இதை யநுஸரித்தே சாஸ்த்ரகாரர்களும்

‘ப்ரத்யக்ஷாநுமாநாகமா: ப்ரமாணாநி’ என்று கூறியுள்ளார். மநு ஸ்ம்ருதியிலும்,

> ப்ரத்யக்ஷஞ்சாநுமாநஞ்ச ஶாஸ்த்ரஞ்ச விவிதாகமம் ।
> த்ரயம் ஸுவிதிதம் ஜ்ஞேயம் தர்மஶுத்திமபீப்ஸதா ॥

என்று காணலாம். மற்றப்படி சாஸ்த்ராந்தரங்களில் சொல்லும் ப்ரமாணங்களெல்லாம் இவைகளிலேயே உள்ளடங்கியவைகள் என்பது முன்னோர்களின் கருத்து.

**சப்தமேன் மூன்றுவது ப்ரமாணம்?**

இவற்றுள் முதலிரண்டு ப்ரமாணங்கள் யாவருக்கும் தெரிந்தவையாதலால் இங்கு மூன்றுவதாகச் சொன்ன சப்த ப்ரமாணத்தைப்பற்றிக் கொஞ்சம் விசாரிப்போம். சப்தத்தால் போதிக்கப்படும் விஷயத்தில் சப்தமே ஸாதநமாதலால் ‘சப்தம்’ ப்ரமாணமென்னலானேம். இந்த (சப்தத்தா லுண்டாகும்) அறிவு, கண் செவி முதலிய இந்த்ரியங்களா லுண்டாகாமையால் ப்ரத்யக்ஷத்தைக் காட்டிலு மிதற்கு வேறுபாடும், கார்யகாரண ஸம்பந்த த்ருஷ்டாந்த முகாந்தரமா யுண்டாகாமையால் அநுமாநத்தி லிருந்து வேறுபாடும் கிடைத்தன.

**சப்தம் இரண்டு வகை**

சப்தம் பொதுவில் இரண்டு விதமெனப்படும். ஒரு புருஷனல் ஸ்வதந்த்ரமாகச் செய்யப்பட்ட சப்தம் என்றும், அப்படியல்லாத சப்தம் என்றும். முதலாவது லௌகிக வாக்யம். இதன் உச்சாரண க்ரமம் புருஷ புத்திக்கு அதீநமாயிருப்பதால் இது பௌருஷேயமெனப்படுகிறது. இரண்டாவது வேதம். இதன் உச்சாரண க்ரமம் எக்காலத்திலும் புருஷனுடைய ஒரு விதமான இஷ்டத்திற்கு மிணங்காமல் பூர்வ புருஷர்களின் உச்சாரண க்ரமத்தை யநுஸரித்து அத்யயந பரம்பரையில் வளர்ந்து வருகிறது. ப்ரளயத்திற்குப் பின்னும் முன்னிருந்த ரீதியிலேயே நாராயணன் ப்ரம்மதேவனுக்கு அதை உபதேசிக்க, அவர் நாரதர் முதலியவர்களுக்கும், இப்படி ஒவ்வொரு ப்ரளயகாலத்திலும் முன்னிருந்த ரீதி குலையாமல் உபதேசிக்கப்பட்டு வருவதால், ஒருபடியாலும் வேதத்தில் எவ்வித புருஷனுக்கும் லௌகிக சப்தத்தில் போல் ஒரு ஸ்வாதந்த்ர்யமு மில்லை. ஆகையால் வேதத்தை அபௌருஷேயமென்றும் நித்யமென்றும் சொல்வது பூர்வர்களின் உச்சாரண க்ரமத்தை யொட்டிய க்ரமத்திலே அத்யயநம் செய்யப்படுவதாலே யாகும். ஆகையால் அக்ஷரங்கள் (வர்ணங்கள்) நச்வரமா யிருந்தபோதிலும் வேதம் நித்யமென யாதொரு குறையுமில்லை.

**வேதத்தின் உபயோகம்**

அவற்றில் லௌகிக சப்தம், மனிதர்கள் அதன் பொருளை எவ்வித ப்ரமாணத்தாலோ கண்டறிந்து ப்ரயோகிக்க வேண்டியிருப்பதால், எவ்விதமாகவோ ஒருவாறு இந்த்ரியங்களைக்கொண்டு அறிந்த அல்லது அவற்றைக்கொண்டு அறியக் கூடிய விஷயங்களையே போதிக்கக் கூடும். வேதமோ அப்படியே புருஷனால் எவ்வித இந்த்ரியங்களாலும் யுக்திகளாலும் அறிய முடியாத விஷயங்களை, அதாவது தர்மம் அதர்மம் ஈச்வரன் இவை போன்றவைகளையே, போதிக்கின்றது. இவைகளை நாம் சரிவர அறிய வேண்டுமானால் வேதத்தைத் தவிர்த்து வேறு எந்த ப்ரமாணமும் இல்லையன்றோ? இப்படி ஒருவிதத்திலும் புருஷ ஸம்பந்தமில்லாமலும் ஒருபடியாலும் அணுவேனும் ஸ்வய நலம் கருதாத சிஷ்டாக்ரேஸரர்களான மஹாஜனங்களாலும் மஹர்ஷிகளாலும் அநாதிகாலமாய் அதீந்த்ரிய விஷயங்களில் ப்ரமாணமாகப் பரிக்ரஹிக்கப்பட்டு வருவதால் அதீந்த்ரியங்களான தர்மாதர்மங்களைத் தெரிவிக்க இதுவே முதன்மையான ப்ரமாணம். இதில் கொஞ்சமேனும் ஏமாற்றத்திற்கு இடமுண்டோவென்கிற ஸந்தேஹத்திற்குக் காரணங்களான புருஷ ஸம்பந்தம் முதலியன போன்ற ஹேதுக்கள் ஒன்றுமில்லாமையாலே முழுமையும் ப்ரமாணமே. அப்ராமாண்ய ஹேது ஒன்றுமில்லாமையாலே வேதம் ஸ்வதஃ ப்ரமாணமென்னலாயிற்று. இக்கருத்தையே தர்ம சாஸ்த்ரத்திலும் '𑌵𑍇𑌦𑍋𑌽𑌖𑌿𑌲𑍋 𑌧𑌰𑍍𑌮𑌮𑍂𑌲𑌮𑍍' என்று வெளியிட்டார்கள்.

**நான்கு வேதங்கள்**

இவ்வேதம்—ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வ வேதம் என நான்கு வகையாம். இப்படிப் பிரிந்த ஒவ்வொரு வேதமும் தனித்தனியே ஒவ்வொன்றும் அநேக சாகைக ளடங்கியவைகளென்று கூறப்படுகின்றது. இப்போதைக்கும் அந்த சாகைகள் ஒவ்வோரிடத்தில் ப்ரசாரத்திலிருப்பதாக காண்கிறோம். இவ்வேதம் ஒவ்வொன்றும், மந்த்ரம் ப்ராம்ஹணம் உபநிஷத் என்ற மூன்று பாகங்களோடு கூடியது; அதை யதைப் படிக்கு மதிகாரிகளுக்கு வேண்டிய லௌகிக வைதிகங்களான ஸகலாம்சங்களையும் அதது அநேகமாகப் போதிக்கக் கூடியதாயு மிருக்கும். சிற்சில சமயங்களில் ஸ்வ சாகையி லில்லாவிடில் மற்றொரு சாகையிலிருந்து ஆராய்ந்து எடுத்துக் கொள்வது முண்டு.

**தர்ம சாஸ்த்ரம் அல்லது ஸ்ம்ருதி**

இப்படி ஆராய்ந்து எடுத்துக் கொள்ளல் எல்லோராலும் கூடாத கார்யமெனக் கருதி இவர்களிடத்தில் இரக்கங்கொண்ட போதாயனர் மறு ஆபஸ்தம்பர் முதலிய மஹர்ஷிகள் வேதங்களை அவைகளின் ஒவ்வொரு சாகையுடனும் படித்து அவற்றின் நுட்பமான பொருள்களை யுணர்ந்து, தமக்கு வேண்டிய எல்லா விஷயங்களையும் யாவரும் எளிதில் அறிந்துகொள்ளுமாறு

தர்ம சாஸ்த்ரங்களை (ஸ்ம்ருதிகளைச்) செய்தார்கள். வேதத்தில் இங்கு மங்கும் சிதறியிருக்கின்ற ஸூக்ஷ்ம தர்மங்களை அவரவர்களுக்கு வேண்டிய ரீதியிலும் வர்ணாச்ரமங்களுக்குத் தக்கவாறும் ஒருங்கே எடுத்துக் கூறுவதாலும் தர்ம சாஸ்த்ரங்கள் என்னும் வேதத்தின் பொருளை ஜ்ஞாபகத்தில் வைத்துச்செய்த படியாலும் இதற்கு 'ஸ்ம்ருதி' என்றும் பெயர் வழங்கலாயிற்று. இப்படி வேதத்தின் அர்த்தத்தையநுஸரித்தே விஷயங்களைக் கூறுவதால் இவை முழுவதும் வேதத்தைச் சார்ந்தவைகளே யென்றும், அணுவேனும் வேதத்திற்கு விரோத மானவைகளல்ல வென்றும் சொல்லலாயிற்று. இந்தத் தர்ம சாஸ்த்ரங்கள் பொதுவில் இருவகைப் பட்டவை. ஒன்று ஸூத்ர ரூபமாயும் மற்றொன்று ஸ்ம்ருதி ரூபமாயுமிருக்கும்.

ஸூத்ரங்களாவன:—மேற் கூறியபடி ஒவ்வொரு வேதமும் அநேக சாகைக ளடங்கி யிருப்பதை யொட்டித் தனித்தனியே அந்தந்த (ஒவ்வொரு) சாகைகளை அத்யயநம் செய்பவர்களும் அப்படியே அந்தந்த ஸூத்ரங்கள் சாகைகளைச் சேர்ந்தவர்களென்று பிரிக்கப்பட்டார்கள். உதாஹரணமாக, தைத்திரீய சாகையை அத்யயநம் செய்ப வர்களுக்குத் தைத்திரீய சாகிகள் என்று பெயர் வழங்கியது. இவ்வாறே மற்றவர்களுக்கும். இப்படிப் பிரிந்த அதிகாரிகளால் செய்யப்பட வேண்டிய வைகளாகவும் த்விஜர்களுக்கு முக்யமானவைகளாகவு முள்ள உபநயநம் முதலிய அவச்யம் செய்யவேண்டிய கர்மங்களையும், மற்று மவர்களால் செய்யப்படவேண்டிய இஹலோக பரலோக ஸாதநமான கர்மங்களையும் அவர்கள் வேதத்திலிருந்தே அறிந்து செய்வது ச்ரமமானது பற்றி அவர்கள் எளிதி லறிந்து செய்யக்கூடிய வரிசையில் எடுத்துரைக்கும் நூல்களே ஸூத்ரங்கள் எனப்படும். எவரெவர்கள் எந்தெந்த சாகைகளைச் சேர்ந்தவர்களோ அவர வர்களுக்கு வேண்டிய கர்மங்களையே ஸூத்ரங்கள் போதிக்கின்றன. ஆகையால் அவரவர்கள் அந்தந்த சாகைகளைச் சேர்ந்தவர்களென்று பிரிக்கப்பட்டதாக மேற் கூறியபடி ஒவ்வொரு சாகைகளையு மொட்டி அநேக ஸூத்ரங்கள் ஏற் பட்டபடியால் ஜநங்களும் 'இவன் ஆபஸ்தம்ப ஸூத்ரீ, இவன் ஆச்வலாயந ஸூத்ரீ' என்றும் வ்யவஹரிக்கப்பட்டார்கள். அவரவர்களுக்கு அவரவர்கள் ஸூத்ரத்தில் கூறியதே பிரமாணம்; ஒருபொழுதும் மற்றொரு ஸூத்ரத்தை எடுத்துக் கொள்ளலாகாது. இவ்வர்த்தத்தை

ஶாகாம் வர்ணம் ச ஸூத்ரம் ச ஸ்வயாசாரமேவ ச ।
வம்ஶேஷ்வாசரிதம் கார்யமந்யதா பதிதோ பவேத் ॥

என்று ஸ்ம்ருதிக்காரர்கள் வெளியிட்டார்கள். ஆனால் சிற்சில விடங்களில் தங்களுக்கு வேண்டிய விஷயம் தங்கள் ஸூத்ரங்களி லில்லாவிடில் மற்றொரு

ஸூத்ரத்தை யநுஸரிப்பது முண்டு. மேற்கூறியபடி வேதம் எப்படி முழுவதும் ப்ரமாணமோ அப்படி ஸூத்ர மும் ப்ரமாணமாகும். ஒரு சிறு பாகமாவது, ஏதோ எழுதியிருக்கிறார்கள் என்றாவது நம்மை ஏமாற்ற எழுதியிருக்கிறார்கள் என்றாவது நாம் சிறிதேனும் ஸந்தேகிக்க இடமில்லை.

ஸூத்ரம் கல்பஸூத்ர மென்றும் க்ருஹ்யஸூத்ர மென்றும் இரண்டு வகையா யிருக்கும். அவற்றில் கல்பஸூத்ரமாவது த்விஜர்களால் 'த்ரேதாக்நி' (அதாவது 'கார்ஹபத்யம்' 'ஆஹவநீயம்' 'தக்ஷிணாக்நி') என்று சொல்லப்படும் மூன்று அக்நிகளை வைத்துக் கொண்டு செய்யப்படும் யஜ்ஞங்களுக்கு வேண்டிய க்ரமத்தையும் மற்று மபேக்ஷிதமான ஸாதந ஸமூஹங்களையும் செவ்வனே போதிப்பது.

**கல்பஸூத்ர க்ருஹ்ய ஸூத்ரங்கள்**

'க்ருஹ்ய ஸூத்ர'மாவது விவாஹ திநம் முதல் ஸம்ரக்ஷித்துவரும் 'க்ருஹ்யாக்நி' ('ஔபாஸநாக்நி') எனப்படும் அக்நியில் செய்யவேண்டியதான கர்மங்களையும் அவைகளின் க்ரமம் முதலியவைகளையும் செவ்வையாய்ப் போதிப்பது. ஆக இரண்டு விதமான ஸூத்ரங்களும், ஒவ்வொருவரும் அநுஷ்டிக்கவேண்டிய கர்மங்கள் யாவற்றையும் ஸவிஸ்தாரமாக யாவரும் எளிதில் தெரிந்து கொள்ளுமாறு வேதார்த்தத்தைச் செவ்வையா யறிந்த மஹர்ஷிகளால் ஒரே ரீதியில் செய்யப்பட்டவைகள். ஆனபோதிலும் த்ரேதாக்நியில் செய்யப்படும் கர்மங்களைப் போதிக்கும் ஸூத்ரங்களைக் 'கல்பஸூத்ர'மென்றும் ச்ரௌத ஸூத்ர மென்றும், ஔபாஸநாக்நியில் செய்யவேண்டியவைகளை வெளியிடும் பாகத்திற்கு 'க்ருஹ்யஸூத்ர'மென்றும் இப்பேதங்களைப் புரஸ்கரித்து இரண்டு விதமாகப் பிரித்திருக்கிறார்கள்.

**தர்ம ஸூத்ரங்கள்**

இவ்வாறு ஸூத்ரங்கள், அவரவர்கள் அநுஷ்டிக்க வேண்டிய கர்மங்களைப் பற்றியவையாதலால், அவரவர்களின் சாகைகளுக் கிணங்க பல மஹர்ஷிகளால் வெவ்வேறு ரீதியில் அவை செய்யப் பெற்றிருக்கின்றன. இந்த ஸூத்ரங்களிலேயே மற்றொரு பாகம், பொதுவில் யாவருக்கும் உபயோகமான வர்ணாச்ரம தர்மங்களையும் ஆசாரம் முதலியவைகளையும் பற்றிப் பேசுகின்றன. அவைகளுக்குத் தர்ம ஸூத்ரங்கள் என்று பெயர்.

**தர்ம சாஸ்த்ரங்கள் ச்லோகரூப மானவைகள்**

அவ்வாறே யாவர்க்கும் பொதுவில் அபேக்ஷிதமான வர்ணாச்ரம தர்மங்களையும் அவற்றின் பேதங்களையும் ராஜகீய வ்யவஹாரம் முதலியவற்றையும் நன்கு எடுத்துரைக்கும் ச்லோக ரூபமான ஸ்ம்ருதிகள் தர்ம சாஸ்த்ர மெனப்படுகின்றன. இவை மநு ஹாரீத அத்ரி ச்லோகரூப யாஜ்ஞவல்க்ய பராசரர் முதலானவர்களால் அந்தந்தக் கால தேச புருஷ ஜாத்யநுகுணமாகச் செய்யப்பட்டுப் 'பதினெட்டு

ஸ்ம்ருதிகள், இருபத்தெட்டு ஸ்ம்ருதிகள்' என்றும் ப்ரஸித்தமா யிருக்கின்றன. இந்த ஸ்ம்ருதிகள் பதினெட்டு என்றும் இருபத்தெட்டு என்றும் அந்தந்த ஸமயத்திலிருந்த ப்ரஸித்தியை யநுஸரித்துக் கணக்கு உண்டானது. இவைகளைத் தவிர மற்றும் சில ஸ்ம்ருதிகளும் ஆங் காங்கு ப்ரசாரத்தி லிருந்து வருகின்றன.

இதிஹாஸ புராணங்கள்

இப்படி வேதார்த்தத்தைப் பரக்க ப்ரகாசிப்பிக்கச் செய்ய ஏற்பட்ட வைகளில் இதிஹாஸ புராணங்கள் ஒன்றாகும். ஆகையால் இவை களையும் ஸ்ம்ருதி கோடியிலேயே அந்தர்ப்பூதங்களென்ன லாம். இவைகளில் இதிஹாஸம் என்பது ப்ரக்யாத இதி வ்ருத்தத்தைச் சொல்லிக்கொண்டு, தந் மூலம் அநேக ஸூக்ஷ்மமான வேதாந்தார்த்தத்தைச் சொல்வதாயிருக் கும். புராணமாவது,

'𑌸𑌰𑍍𑌗𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌤𑌿𑌸𑌰𑍍𑌗𑌶𑍍𑌚 𑌵𑌂𑌶𑍋𑌮𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑌰𑌾𑌣𑌿 𑌚 ।
𑌵𑌂𑌶𑌾𑌨𑍁𑌚𑌰𑌿𑌤𑌂 𑌚𑍇𑌤𑌿 𑌪𑍁𑌰𑌾𑌣𑌂 𑌪𑌞𑍍𑌚𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥'

என்கிறபடி ஸ்ருஷ்டி ப்ரளயம் முதலியவற்றை யெடுத்துச் சொல்வதாயிருக் கும். இந்தப் பேதத்தையிட்டு ஒன்றுக்கு 'இதிஹாஸம்' என்றும் மற்றொன் றுக்குப் 'புராணம்' என்றும் பிரித்துப் பெயரிட்டனர். இதைத் தவிர இந்த இதிஹாஸ புராணங்கள், ஸ்ம்ருதிகள் எவ்வாறு வேதார்த்தத்தை விஸ் தரித்து ப்ரகாசிப்பிக்கின்றனவோ அவ்வாறே வேதார்த்த ப்ரகாசகமாய் தர்ம ப்ரதிபாதகமா யிருந்தபோதிலும், வேதம் பூர்வகாண்டம் (கர்ம காண் டம்) உத்தர காண்டம் (ஜ்ஞாந காண்டம் அல்லது உபநிஷத் காண்டம்) என்று பிரிந்தாற்போல், அவைகளை உபப்ரஹ்மணம் செய்ய ப்ரவர்த்தித்த க்ரந்தங் களும் அவைகளின் க்ரமத்திலேயே இரண்டு விதமாகப் பிரிந்து, தர்ம சாஸ் த்ரங்கள் பூர்வ காண்டத்தின் அர்த்தத்தை விவரிக்கின்றன வென்றும், இதி ஹாஸ புராணங்கள் ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களையும் சில விடங்களில் ந்யாஸ வித்யை முதலியவைகளையும் ப்ரகாசப் படுத்துவதால் உத்தர காண்டார்த்த மான வேதாந்தார்த்தத்தை விசதீகரணம் செய்ய ஏற்பட்டவைகள் என்றும்

['𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌣 𑌪𑍂𑌰𑍍𑌵𑌭𑌾𑌗𑌾𑌰𑍍𑌥𑌪𑍂𑌰𑌣𑌂 𑌧𑌰𑍍𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌤𑌃 ।
𑌇𑌤𑌿𑌹𑌾𑌸 𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌰𑍍𑌥𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍍𑌯𑌤𑍇 ॥']

சொல்வதுண்டு. ஆகையால் இதிஹாஸ புராணங்கள் வேதாந்தார்த்த விசதீகரணத்திற்கு ஏற்பட்டவைகளென வைத்து, வித்யா ஸ்தாநங்களை,

['புராண ந்யாய மீமாம்ஸா தர்மஶாஸ்த்ராங்க மிஶ்ரிதா:।
வேதா: ஸ்தாநாநி வித்யாநாம் தர்மஸ்ய ச சதுர்தஶ ॥']

பதினுன்காகப் பிரித்துக் கணக்கிடுங் காலத்தில் இதிஹாஸ புராணங்களுக்கு ஒன்றோடொன்று விசேஷ பேதமில்லை யாதலால் தனித்தனியே பிரித்துக் கணக்கிடாமல் ஒரே புராண பதத்தால் சொல்லி யிருக்கிறார்கள். ராமாயண மஹாபாரதங்கள் இதிஹாஸங்கள் எனப்படும். ராமாயணம் வேதார்த்தோபப்ரம்மணத்திற்காக ஏற்பட்ட தென்பது ராமாயணத்தைக் குசலவர்களுக்கு உபதேசிக்குங் காலத்தில் 'வேதோபப்ரும்ஹணார்த்தாய தாவக்ராஹயத ப்ரபு:' என்பதால் தெரிய வருகிறது. மஹாபாரதம் வேதார்த்தத்தைச் சொல்லுகின்ற தென்பது, வேதார்த்தந் ஜடிலமா யிருப்பதால் வேத துல்யமாய் மற்றொரு வேதமோவென ஸந்தேஹிக்கலாம்படி யிருப்பதாலே நான்கு வேதங்களுக்கு மேல் 'பாரத: பஞ்சமோ வேத:' இது ஐந்தாவது வேதமென்று புகழ் பெற்றதி லிருந்தே நிச்சயம். மத்ஸ்யாதி புராணங்கள் ப்ரதாநமாய்ப் பதினெட்டு. மற்றும் சில உபபுராணங்களு முண்டு. இப்பதினெண் புராணங்களில் ஸாத்விகங்கள் ஆறு, ராஜஸங்கள் ஆறு, தாமஸங்கள் ஆறு; இப்படி மூன்று விதமாய்ப் புராணங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் ஸாத்விக மெனப்படும் ஸ்ரீ விஷ்ணு புராணம் முதலிய ஆறு புராணங்கள் பரமைகாந்திக்கு மிகவும் உபஜீவ்யமானவை. மற்றவை அவ்வோ பலத்தை யபேக்ஷிப்போர்க்கு உபயோகமானவை.

அப்படியே ஸாங்க்ய யோக பாசுபத பாஞ்சராத்ரங்களும் வேதார்த்த விசதீகரண ப்ரவ்ருத்த மானவைகளாதலால் அவைகளும் தர்மசாஸ்த்ர பேதங்களாகும். அவற்றில் ஸாங்க்யம் பரிசுத்தாத்ம சிந்தநரூப ஜ்ஞாந யோகத்தைத் தெரிவிக்கின்றது. ஸமாதி பர்யந்தமான கர்மயோக போதகம் யோகசாஸ்த்ரம். ஸாமாந்யாதிகாரிகளுக்குப் பசுபதி பஜநத்தை யுபதேசிக்கின்றது பாசுபதம். ப்ரதிபுத்தர்களான பரமைகாந்திகளுக்குப் பகவத் பஜநத்தை உபதேசிக்கின்றது பாஞ்சராத்ரம். இவைகள் ஒவ்வொன்றும் சிற்சில அம்சங்களில் ஒன்றையொன்று உபஜீவித்திருக்கின்றன. இவை ஒன்றோடொன்று முரண்பட்டால் வேதத்தை யநுஸரித்துச் சொல்லுமது ப்ரபலமாகும்.

ஸாங்க்ய யோக பாசுபதங்கள்

இப்படியே பகவத் கீதையும் பூர்வோத்தர மீமாம்ஸா ஸூத்ரமும் வேதார்த்தத்தை விசதப்படுத்தவே ப்ரவ்ருத்த மானபடியால் அவைகளும் ஸ்ம்ருதிகளே. ஆகையால்தான் 'ஸ்ம்ருதிஶ்ச' 'ஸ்ம்ருதேஶ்ச' என்கிற ஸூத்ரங்களில் பாஷ்யகாரர்கள் பகவத்கீதையை யுதாஹரிப்பது வழக்கமா யிருக்கிறது அப்படியே,

பகவத்கீதையும் மீமாம்ஸா ஸூத்ரங்களும் ஸ்மிருதிகளே

'ஶிக்ஷாவ்யாகரணம் ச்ச²ந்தோ நிருக்தம் ஜ்யோதிஷம் ததா ।
கல்பஶ்சேதி ஷடங்கானி வேதஸ்யாஹுர்மனீஷிண:' என்றும்,

"அங்கானி வேதாஶ்சத்வாரோ மீமாம்ஸா ந்யாயவிஸ்தர: ।
புராணம் தர்மஶாஸ்த்ரஞ்ச வித்யா ஹ்யேதாஶ்சதுர்தஶ ॥"

"சந்த: பாதௌ ஶப்தஶாஸ்த்ரஞ்ச வக்த்ரம் கல்ப: பாணீ ஜ்யோதிஷம் சக்ஷுஷீ ச ।
ஶிக்ஷாக்ராணம் ஶ்ரோத்ரமுக்தம் நிருக்தம் வேதஸ்யாங்கான்யாஹுரேதானி ஷட்ச ॥'

என்றும் வேதாங்கமெனச் சொல்லப்பட்ட சிக்ஷை முதலியவைகளும் வேதார்த்த நிர்ணயோபகாரக மானபடியால் ஸ்ம்ருதிகளிலேயே அந்தர்ப்பூதங்கள். இப்படி இவையெல்லாம் வேதோபகாரகமாக இருந்த போதிலும் அததன் உபயோக விசேஷத்தை யநுஸரித்து இவற்றில் சில அங்கங்கள் என்றும், சில உபாங்கங்கள் என்றும் வ்யவஹரிக்கப்பட்டது.

உபப்ரம்ஹணங்களைக்கொண்டே வேதார்த்த நிர்ணயம் செய்யவேண்டும்.

இப்படி நிரூபிதமான ச்ருதி ஸ்ம்ருதிகளில் ச்ருதியை ஸாக்ஷாத் பகவதாஜ்ஞா ரூபமென்றும், ஸ்ம்ருதியும் அந்த ச்ருதியைப் பின்பற்றி ப்ருவ்ருத்தமாதலால் அதுவும் பகவதாஜ்ஞா ரூப மெனவும் 'ஶ்ருதி: ஸ்ம்ருதிர்மமைவாஜ்ஞா' என்று பகவான் தானே யருளிச்செய்தான். ப்ராம்ஹண, மந்த்ர, அர்த்தவாத ரூபமாக இருக்கும் வேதங்கள், சில விடங்களில் கலந்தும் சில விடங்களில் பிரிந்தும் சில விடங்களில் ஸங்கீர்ணமாயு மிருப்பதாலும், சில விடங்களில் வேத பாகங்கள் உத்ஸந்நமா யிருப்பதாலும் அவைகள் துர்ப்போதங்கள் என நினைத்து, மந்த மதிகளான நம்முடைய அநுக்ரஹார்த்தம் மந்வாதி மஹர்ஷிகள் ஸ்ம்ருதி புராணேதிஹாஸாதிகளில் அவ்வர்த்தங்களை ப்ரகாசிப்பித் திருக்கின்றார்கள். இவ்வர்த்தத்தை,

"உத்ஸந்நா: ப்ரச்சந்நாஶ்ச வேதிகா: ஶாகா: ப்ரகீர்ணாஶ்சாபரேவிப்ரா: ।
தஸ்மாத்ஸர்வவேதார்த்தா: ஸ்ம்ருதிதந்த்ரே ப்ரதிஷ்டிதா: ॥"

என னும் மரீசி வாக்யத்தில் காணலாம். சில விடங்களில் ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்ட சில அர்த்தங்கள் ப்ரத்யக்ஷ ச்ருதியில் காணு விடினும், லுப்தமாய் விட்ட அம்சங்களை அம்மஹான்கள் கண்டறிந்து உபதேசித் திருக்கலாமெனக் கொள்ளல் வேண்டும். ஆபஸ்தம்பரும் இவ்வர்த்தத்தை, 'தேஷாமுத்ஸந்நா: பாடா: ப்ரயோகாதநுமீயந்தே' என்று இந்த ஸ்ம்ருத்யர்த்தங்களைக் கொண்டு அதற்குத் தகுந்த ச்ருதியை அநுமாநம் செய்யவேண்டு மென்கிறார். அப்படியே வேதத்தில் சிற்சில கடிந பாகங்களை ஸ்ம்ருதிக்காரர்கள் விசதப்

படுத்தி யிருக்கின்றார்கள். ஆகவே இவர்களின் ஸ்ம்ருதிகளை யநுஸரித்தே அந்த வேதங்களின் அர்த்தத்தை நிஷ்கர்ஷித்தல் பொருந்தும். இதற்கிணங்க

'இதிஹாஸ புராணாப்4யாம் வேத3ம் ஸமுபப்3ரும்ஹயேத்।
பி3பே4த்யல்பஶ்ருதாத்3வேதோ3 மாமயம் ப்ரதரிஷ்யதி'

[வேதம், அல்ப அறிவுள்ளவனிட மிருந்து, எவன் எங்கு அபார்த்தம் செய்து விடுவானோ வென்று பயப்படுகிற படியால் வேதார்த்தத்தைச்செவ்வையாய்க் கண்டறிந்த மஹர்ஷிகளின் வாக்யங்களைக் கொண்டே அவ்வர்த்தங்களை நிர்த்தாரணம் செய்யவேண்டும்] என்பதும் முன்னோர்களின் கொள்கை. இப்படிச் செய்வது லோக ந்யாயத்தை யநுஸரித்திருப்பது மாத்ரமன்றிக்கே 'யத்3வை கிஞ்ச மநுரவத3த் தத்3பே4ஷஜம்' [மநு சொல்வதத்தனையும் மருந்து] என்று வேதமே அவர்களின் ஸ்ம்ருதிகளைப் புகழ்ந்து அவர்கள் வேதார்த்தத்தை நன்கறிந்தவர்க ளென்கிறது.

**ஆசாரம் ப்ரமாணம்**

இப்படி ச்ருதியும் ஸ்ம்ருதிகளு மில்லாத சில விஷயங்களில் அப்படிப் பட்ட மஹாங்களின் ஆசாரமும் ப்ரமாணமாகும். இது 'யதா2 தே தத்ர வர்தேரந் ததா2 தத்ர வர்தேதா2: । யாந்யஸ்மாகம் ஸுசரிதாநி தாநி த்வயோபாஸ்யாநி' என்கிற ச்ருதியாலும்,

'வேதோ3கி2லோ த4ர்மமூலம் ஸ்ம்ருதிஶீலே ச தத்3விதா3ம் ।
ஆசாரஶ்சைவ ஸாதூ4நாம் ஆத்மநஸ்துஷ்டிரேவ ச ॥'

என்கிற ஸ்ம்ருதியாலும் ப்ரஸித்தம்.

இப்படி ஒருவிதமான லௌகிகாபிஸந்தியன்றிக்கே சிஷ்டர்களான த்ரைவர்ணிகர்களால் பரிக்ரஹிக்கப்பட்டு வேதார்த்த விவரணம் செய்து வருவதால், ஸ்ம்ருதி இதிஹாஸ புராணம் முதலியன முற்றும் ப்ரமாணமே. எங்காகிலும் ஸ்ம்ருதி ச்ருதியுடன் விரோதித்தால் அந்த ஸ்ம்ருதிக்கு மூலபூதமான மற்றொரு ச்ருதி யிருக்கக் கூடுமென்று அநுமாநம் செய்யக் கூடுமாதலால், அப்படி அநுமிக்கப்பட்ட ச்ருத்யர்த்தத்திற்கும் ப்ரத்யக்ஷ ச்ருத்யர்த்தத்திற்கும் அநுஷ்டாநத்தில் விகல்பம் என்றும், அந்த ஸ்ம்ருதிக்கு மூல பூதமான ப்ரத்யக்ஷ ச்ருதியை எப்பொழுதாவது காணும் வரையில் அவ்வர்த்தத்திற்கு அநுஷ்டாநம் வேண்டியதில்லை ['அநநுஷ்டேயம்... ப்ராமாண்யம்'] என்றும் சிலர் (மீமாம்ஸகர்கள்) சொல்வார்கள். ஸ்ம்ருதி கர்த்தாக்கள் மிகவும் நம்பத் தகுந்தவர்களா யிருந்தாலும், அவர்கள் ஸத்வ ரஜஸ் தமோ குண முள்ளவர்க ளானபடி

**பரஸ்பர விரோதத் தில் எது ப்ரபலம்?**

யால் கர்ம வச்யர்க ளானபடியாலே ஒரு ஸமயம் அவர்களிடத்தில் தவறுதலும் ஸம்பாவிதம் தான் அந்த ஸ்ம்ருத்யர்த்தத்திற்குப் பாதமே அங்கீகரிக்க வேண்டுமென்பர் மற்றும் சிலர். தத்வ விஷயத்தில் விரோதமிருந்தால் ஸர்வாத்மநா பாதமே தான். இம்மாதிரி ஓரிடத்தில் விரோத மிருப்பதைக் கண்டு, விரோதமில்லாமலும் ப்ரத்யக்ஷ ச்ருதியுமில்லாத விடங்களிலும் இவ்வாறு தவறுதல் ஸம்பாவிதமென வைத்து, அங்கும் ச்ருத்யநுமாநம் செய்வது அஸாத்யமாகாதோ வெனப் பார்ப்பது உசிதமன்று. பல விடங்களில் ச்ருதியுடன் ஸம்வாதம் (ஒற்றுமை) இருப்பதாலும் வைதிகர்கள் யாவரும் ஸ்ம்ருதியைப் பரிக்ரஹித் திருப்பதாலும் அந்த ஸ்ம்ருதிக்கு மூல ச்ருதியை ஊஹிப்பதே அழகு.

**வேதம் ஸ்வத: ப்ரமாணம்**

வேதம் எவ்வாறு ஸ்வத: ப்ரமாணமோ, அவ்வாறு ஸ்ம்ருதியும் ஸ்வத: ப்ரமாணமே. எங்கேயாவது பாதகமிருந்தால் அவ் விஷயத்தில் மட்டும் பூர்வோக்த ரீதியில் அப்ரமாண மாகலாம். இப்படி ஸ்வத: ப்ரமாண மென்பதாலேயே, வேதம், இந்தப் புருஷனால் செய்யப் பட்டதென்று அங்கீகரியாமல் அபௌருஷேய மென அங்கீகரித்தாலும், நம்பத் தகாத புருஷனல் செய்யப்பட்ட தென்கிற பாதக மில்லாததால் முற்றிலும் ஸ்வத: ப்ரமாணமாயிற்று. இத்தால் 'நம்பத் தகுந்த புருஷனல் செய்யப்படாததால் அதற்கு எவ்வாறு ப்ரமாண்யஸித்தி' என்பது நிரஸ்தம்.

(ஸசேஷம்.)

---

ஸ்ரீ:

# கடிதங்கள்

## (1) ஸ்ரீ வித்யோல்லாஸிநீ ஸபா

ஸ்ரீ. வே. தி. ஸம்பாதகருக்கு:—

சென்னை ஸௌகார்பேட்டை 51 நாராயண முதலி தெருவிலிருக்கும் K. A. C. ஸம்ஸ்க்ருத ஹைஸ்கூலில் நாலு மாத காலமாக ஸ்ரீவித்யோல்லாஸிநீ என்ற பெயருடன் மாணவர்களின் முன்னேற்றத்திற் கெனவும் ஸம்ஸ்க்ருத பாஷையை அபிவ்ருத்தி செய்வதற்கெனவும் ஓர் ஸம்ஸ்க்ருத மாணவர் சங்கம் ஏற்படுத்தப் பட்டு. அதனுதரவில் ஓர் வாசகசாலையும் வாராவாரம் மீட்டிங்குகளும் பல தலைவர்கள் முன்னிலையில் நடைபெற்று வருகின்றன. இச்சபை மீண்டும் இவ்வாரத்தில் 13—2—28-ல் பச்சையப்பன் காலேஜ் ப்ரதான ஸம்ஸ்க்ருத பண்டிதர் ஸ்ரீமான் வி. அநந்தாசாரியர் அவர்கள் தலைமையில் கூடியது. எல்லா மாணவர்களும் உபாத்தியாயர்களும் அங்கு கூடியிருந்தனர். அச்சமயம் V. சுந்தரதாதம் என்னும் மாணவனல் "அஹிம்ஸாபரமோதர்ம:" என்னும் விஷயம் வடமொழியில் உபந்யஸிக்கப்பட்டது. பின்பு மற்ற மாணவர்களும் அதே விஷயத்தை ஆதரித்துப் பேசினர். அதன் பின்பு ஹெட்மாஸ்டர் ஸ்ரீமான் T. S. ஸ்ரீநிவாஸய்யங்கா ரவர்கள் அஹிம்ஸையே சிறந்தது என்பதை நன்கு விளக்கிக் காட்டினர். கடைசியாக அக்ராஸநர் அஹிம்ஸையைப் பற்றிச் சொல்லுவது மிகவும் கஷ்டமென்றும், நாமுட்கொள்ளும் பொழுதும் நடக்கும் பொழுதும் மற்றெல்லாச் சமயங்களி

லும் அநேக கோடி க்ருமிகள் நாசமடைகின்றன வென்றும், அதற்குப் பரிஹாரமாகவே பஞ்சமஹா யஜ்ஞங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன வென்றும், ஸ்தாவர வர்க்கங்களும் பிராணிகளைச் சேர்ந்தவை என்பதைப்பற்றி ஸ்ரீ ஜகதீசசந்திர போஸ் அநேக விஷயங் கண்டு பிடித்திருப்பதையும், அஹிம்ஸையே சிறந்தது என்பதைப்பற்றியும், மிகவும் விரிவாகவும் அநேக உபாக்யானங்களுடனும் ப்ரமாணங்களுடனும் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். முடிவில், ஹெட்மாஸ்டரவர்களால் வந்தனம் கூறப்பெற்று, மங்கள வாழ்த்துடன் ஸபை கலைந்தது. இது நீடூழி வாழ்ந்து, ஸம்ஸ்க்ருதத்தை அபிவிருத்தி செய்ய முன்வர பகவான் அருள் புரிவாராக.

மதராஸ். கே. ஏ. ரங்கநாதன்.

## (2) ஸ்ரீ ஸத்வித்யா பாடசாலை

ஸ்ரீ. வே. தீ. ஸம்பாதகருக்கு:—

இக்காலத்தில் பாஷாந்தரம் படிக்கும் சிறுவர்களுக்குத் தங்கள் மதத்திலும் ஸம்ப்ரதாயத்திலும் ச்ரத்தை மிகவும் குறைந்துகொண்டு வருகிறதென்பது யாவரும் அறிந்த விஷயம். அவற்றில் சிலர்க்கு ச்ரத்தை ஏற்படினும் பலவிதமான அநுகூலக் குறைவினால் அது தலைக்கட்டாதொழிகின்றது. இவ்விஷயத்தில் வேண்டிய ஸௌகரியங்களைச் செய்துகொடுத்து ஸத்வித்யாப்யாஸம் செய்விப்பதற்கென்று சைதாப்பேட்டையில் பாடசாலை ஒன்று ஏற்படுத்துவதாய் உத்தேசிக்கப்பட்டு, ஷை பாடசாலை நாளது வெள்ளிக்கிழமை (23—3—28) காலை 6-மணிக்கு சைதாப்பேட்டை புஜங்கராவ் தெரு 1-நெ. க்ருஹத்தில் ஆரம்பித்து நடந்து வருகிறது. ஆஸ்திகர்கள் அனைவரும் தங்கள் குமாரர்களை ஷை பாடசாலைக்கு அனுப்புவதுடன், தாங்களும் உடனிருந்து ஷை பாடசாலையை அபிவ்ருத்திக்குக் கொண்டு வருவதற்குரிய முயற்சிகளைச் செய்யுமாறு ப்ரார்த்திக்கிறோம்- உத்யோகஸ்தர்களுக்கும் ஆங்கிலம் கற்கும் சிறுவர்களுக்கும் ஸௌகர்யமாயிருக்கும்படி காலை மாலை இருவேளைகளிலும் பாடசாலை நடத்தப்படும். சைதாப்பேட்டை பெருமாள் கோயில் தெரு 22-ம் நெ. க்ருஹத்தில் இருக்கும் ஸ்ரீ. உப. திருவெள்ளியங்குடி தேசிகாசார்ய ஸ்வாமி ஷை பாடசாலைக்கு உபாத்யாயராக இருந்து நடத்திவைக்க ஸம்மதித்திருக்கிறார்.

1. கொ. ஸுதர்சநாச்சாரியர், 2. ரா. வரதாச்சாரியர்.

## (3) ஒரு ப்ரச்நம்

ஸ்ரீ. வே. தீ. ஸம்பாதகருக்கு:—

“ வநேரணே ஶத்ருஜலாக்நிமத்யே மஹார்ணவே பர்வதமஸ்தகே வா ।

ஸுப்தம் ப்ரமத்தம் விஷமஸ்திதம் வா ரக்ஷந்தி புண்யாநி புராக்ருதாநி ॥ ”

பூர்வ பாக்யம் ஒருவனுக்கு இருந்தால் மேற்சொன்ன ஆபத்துக்களிலிருந்து அவன் காப்பாற்றப் படுகிறான் என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஒருவன் பூர்வ ஜன்மாந்தரத்தில் செய்த பூஜாபலனை மறு ஜன்மத்தில் அனுபவிக்கிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவன் கெடுதல்கள் செய்து, இப்பொழுது இந்த ஜன்மத்தில் அகோரமான தபஸ்ஸுகளைச்செய்தோ அல்லது அனுஷ்டான கர்மங்களை அதிகமாகச்செய்வதாலேயோ பூர்வ கெட்ட பலன்கள் இந்த ஜன்மத்தில் வாராவண்ணம் ஆத்மரக்ஷணம் செய்துக்கொள்ளக் கூடுமா ? மற்றொருவன் பூர்வ ஜன்மத்தில் பாக்யம் செய்வதாக வைத்துக்கொண்டு இந்த ஜன்மத்தில் துராக்ருதமான செயல்களைச் செய்கிறான். இப்பேர்ப்பட்டவனுக்குப் பூர்வ பாக்யத்தினால் இந்த ஜன்மத்தில் அவனுக்கு சிக்ஷைகள் கிடையாதா? இந்த ஜன்மத்தில் செய்த பிசகுகளுக்கு மறு ஜன்மத்தில் தானா சிக்ஷை ?

திருத்தருப்பூண்டி. டி. ஜி. ஸ்ரீநிவாஸாசாரி.

181

ஸ்ரீ:

॥ ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ॥

யோ(அ)ந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்

ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।

அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்

ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

# பத்ராதிபரின் குறிப்புகள்.

**பாச்சாத்ய ஸ்த்ரீயின் ஹிந்துமத ப்ரவேசம்.**

சென்ற மாசி மாஸத்தில் கோதாவரீ தீரத்திலுள்ள நாஸிகா க்ஷேத்திரத்திற்கு ஸமீபத்தில், அமெரிக்கா தேசத்திய ஸ்த்ரீயான மிஸ். முல்லர் என்னும் ஒரு மாது, கொல்ஹாபூர் ஸ்ரீ கரவீர மடத்தின் ஆஸ்தாநாதிபதியாயிருக்கும் குருத்கோடி மஹா பாகவதரென்று வ்யவஹரிக்கப்படும் ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமியால் அநேக ப்ராஹ்மணர்கள் முன்னிலையில் ஸமந்த்ரகமாகச் சுத்தி செய்யப்பெற்று நமது மதமாகிற ஹிந்து மதத்தில் சேர்ப்பிக்கப்பட்டாளென்று நாம் வ்ருத்தாந்த பத்ரிகைகளிலிருந்து அறிகிறோம். அந்த ஸ்த்ரீ அமெரிக்கா தேச வாஸியான ஒரு தநவானுடைய புத்ரியென்றும், அவள் சற்றேறக்குறைய 20 வயதுள்ளவளென்றும், பால்யம் முதல் அவள் ஹிந்து மதத்தில் ஒருவித அபிநிவேசம்

கொண்டிருந்தாளென்றும், ஸமீப காலத்தில் நமது தேசத்திலிருந்து அவ்விடம் போயிருந்த இன்டோர் தேசத்தின் மாஜி அரசனாகிய ஸர் துக்கோஜி ராவ் ஹோல்கார் என்பவரை அவள் யாத்ருச்சிகமாக ஸந்தித்தாளென்றும், பகவத் ஸங்கல்பத்தாலோ அல்லது ஜன்மாந்தர வாஸனையாலோ அல்லது வேறு காரணத்தாலோ அவர்கள் இருவருக்கும் பரஸ்பரம் அநுராகம் உத்பன்னமாகி விவாஹத்தில் பர்யவஸிக்குமளவு அது வ்ருத்தி யடைந்ததென்றும், அது காரணமாக அந்த ஸ்த்ரீக்கு ஏற்கெனவே ஜநித்திருந்த ஹிந்து மதாபிநிவேசம் த்ருடமாகி அவளை இந்தத் தேசத்தில் வந்து வஸிக்கும் படிக்கும், அந்தப் புமானுடைய மதத்தை அவலம்பிக்கும் படிக்கும், இம்மாதிரியான ஒரு சுத்தி கர்மத்திற்கு அவளை ஸம்மதிக்கும் படிக்கும் அது தூண்டிற்றென்றும் நாம் கேள்விப்படுகிறோம். அவளுடைய ஜநந குல பந்துக்களான குரு ஜநங்களும் மற்றை ஹிதேச்சுக்களும் அவளை இந்த நிர்ணயத்திலிருந்து திருப்பப் பஹு ப்ரகாரமாக ப்ரயத்நப்பட்டும், அவள் ஒரே உறுதியுடன் இம்மார்க்கத்தில் ப்ரவ்ருத்தித்ததாகத் தெரியவருகிறது. கோதாவரி தீரத்தில் நடைபெற்ற சுத்தி கர்ம காலத்தில் கணக்கற்ற ஜநங்கள் கூடினார்களென்றும், அந்தக் கர்மத்தின் அநுஷ்டானத்தை அவர்களெல்லாரும் பெரியதொரு உத்ஸவமாகக் கொண்டாடினார்களென்றும் கிம்வதந்தி. சுத்தி புண்யாஹவாசநம் முதலிய சில கர்மங்களைச் செய்வித்து ஸ்ரீசங்கராசார்யர் அந்த ஸ்த்ரீக்குச் 'சர்மிஷ்டை' என்று நாமகரணமும் செய்தாராம். மந்த்ரோபதேசம் ஏதாவது செய்யப்பட்டதோ இல்லையோ என்பது நமக்குத் தெரிய மாட்டாது. அந்த ஸ்த்ரீ, பூர்வமே ரூபவதியாக இருந்ததாகவும் இப்பொழுது இத்தேசத்திய வஸ்த்ர பூஷண திலக தாரணாதிகளால் அதிக சோபையை அடைந்திருப்பதாகவும் சொல்லுகிறார்கள்.

இவை யெல்லாம் ஸந்தோஷகரமான ஸமாசாரங்களே. ஜநங்கள் எல்லாரும் ஸுகிகளாக இருக்க வேண்டுமென்பதைத் தவிர்த்து வேறு எது நாம் லோகத்திற்கு ஆசாஸிக்கும் ப்ரார்த்தனை? தவிரவும், லோகத்தின் ஹிதத்தை உத்தேசித்து ஸ்ரீமந் நாராயணனால் ப்ரோக்தமாயுள்ள ஹிந்து தர்மங்கள் தேசாந்தரீயர்களிடத்திலும் பரவுகின்றன என்பது ஆஸ்திகரெல்லாருக்கும் ஆநந்தத்தையே விளைவிக்குமன்றோ?

"സമോഽഹം സൎവ്വഭൂതേഷു"

என்கிறபடி ஸ்ரீ சரண்யனும், ஆச்ரிதர்களுடைய ஜாதி ஆகாரம் முதலிய தாரதம்யங்களை அநாதரித்து எல்லாரையும் எவ்வித வாசியுமின்றிக்கே அங்கீகரிக்கிறானென்று நமது சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. ஆகையால், ஸ்ரீ சரண்யனை ஸமாச்ரயிக்கும் ஜநங்கள் தேசாந்தரீயர்களா யிருந்தபோதிலும், அவர்கள் பகவதாச்ரிதர்கள் என்னும் ஆகாரத்தால் நமக்கு ப்ராத்ரு ஸ்தாநீயராக ஆகிறார்கள் என்பது நிச்சயம். அவர்களுடைய கோஷ்டி வ்ருத்தி யடைவது நமக்கு மிக்க ஸந்தோஷத்திற்கே ஹேது. இந்த ஸ்த்ரீயின் அபிஸந்தி ஸாதுவாக மாத்ரம் இருக்கும் பக்ஷத்தில் அவளுடைய ப்ரவ்ருத்தியைப் பற்றி நாம் கொஞ்சமேனும் சோகிக்க மாட்டோம்.

ஆனால், இந்த ஸ்த்ரீ விஷயமாக ஸ்ரீ சங்கராசார்யர் செய்திருக்கும் வைதிக கர்மங்களைப்பற்றி மாத்ரம் நமது மநஸ் ஸமாதாநத்தை அடையவில்லை. 'அவரால் செய்விக்கப்பட்ட சுத்தி கர்மம் என்பது என்ன அங்கங்களை அடக்கியுள்ளது? என்ன வைதிகபலத்தை உத்தேசித்து அவர் இந்தக் கர்மத்தைச் செய்வித்தார்? இதைச் செய்விப்பதற்கு எந்தச் சாஸ்த்ரம் ப்ரமாணம்? இப்பொழுது இந்தக் கர்மத்தின் பலமாக அந்த ஸ்த்ரீயின் வர்ணம் மாறுதலை அடைந்து விட்டதா? அவள் எந்த வர்ணத்தின் தர்மத்தை இப்பொழுது அநுஷ்டிக்க அர்ஹை?' இத்யாதியான பல சங்கைகள் நமது மநஸ்ஸில் உதிக்கின்றன. ஒரு வைதிக கர்மத்தின் அநுஷ்டாநத்தால் ஜந்ம ப்ராப்தமான வர்ணம் மாறுதல் அடைகின்றது என்பதை நாம் அறியோம். பகவானை ஆச்ரயிக்கும் பொருட்டு ஒரு ஸ்வரூப யோக்யதையைப் பெறுவதற்காக மாத்ரம் இந்தக் கர்மம் அநுஷ்டிக்கப்பட்டது என்று சொல்வதும் அஸங்கதம். இம்மாதிரியான வைதிக கர்மம் ஒன்றையும் செய்து கொள்ளாமலே அந்த ஸ்த்ரீ ஸ்ரீ சரண்யனை ஆச்ரயிக்கக்கூடாதோ? அத்யந்தம் ப்ரீதி ப்ரேரிதையாய் அந்த ஸ்த்ரீ பகவானை ஆச்ரயிக்கும் பக்ஷத்தில், அவள் ஹீநை ஸ்த்ரீ என்னும் காரணத்தால் அந்தப் பகவான் அவளை நிராகரித்து விடுவாரோ? "മാംഹി പാൎത്ഥ വ്യപാശ്രിത്യ യേഽപി സ്യുഃ പാപയോനയഃ" என்பது நமக்கு ப்ரமாணமன்றோ? பகவந் முகோல்லாஸத்தையும் பகவத் க்ருபையையும் அபேக்ஷிப்பவர்கள் நமது நாலு வர்ணத்த

வர்களுள் ஒருவராக இருத்தல் வேண்டும் என்னும் நியமம் ஓரிடத்திலும் காணப்படவில்லையே! ஆகையால், ஸ்ரீ சங்கராசார்யர் அந்த ஸ்த்ரீயின் ஆத்மோஜ்ஜீவநத்தை மாத்ரம் கோரினவராக இருக்கும் பக்ஷத்தில், இந்த வைதிக கர்மமொன்றையும் செய்விக்காமல் இருந்திருக்கலா மென்றே நமக்குத் தோன்றுகிறது.

வைதிக கர்மாநர்ஹர்களுக்கு வைதிக கர்மங்களைச் செய்விப்பதனால் ஜகத் ப்ரதாரிதமாகப் போவதுடன் புத்திமான்களாயுள்ள ஜநங்களின் மநஸ்ஸில் நமது மதத்தைப் பற்றி ஒரு விபரீத க்ரஹணமும் ஜநிப்பிக்கப்படுகின்றது. நமது வைதிக கர்மங்களுக்கு அத்ருஷ்ட பல முண்டு என்பது உண்மையே. ஆனால், அந்த அத்ருஷ்ட பலம் நிர்த்திஷ்டமான வ்யக்திகளிடத்தில் மாத்ரம் ஸம்பவிக்குமே தவிர எல்லாரிடத்திலும் அது நேருகின்றது என்று சொல்வது ஸாத்யமில்லை. எல்லா ஜநங்களுக்கும் பகவானை அடைவதே பரமோத்தேச்யம். அது எல்லாருக்கும் பகவத் ஸமாச்ரயணத்தால் ஸாத்யமே. அதில் ஜாதி ஆகாரம் முதலியவை அவ்யாவர்த்தகங்கள்; எல்லாருக்கும் ஸாதாரணமாயுள்ள ஸத்ய வசநம் முதலிய ஸாமாந்ய தர்மமும் ஹார்த்தமான பக்தியும் மாத்ரம் அதற்கு அபேக்ஷிதம். அந்த ஸாமாந்ய தர்மத்தையும் பக்தியையும் செய்வதற்கு ஒருவித கர்ம சுத்தியும் தேவையில்லை.

'ப்ராஹ்மணர்கள் மாத்ரம் சில விசேஷித்த தர்மங்களை அநுஷ்டித்து வருகிறார்களே! அது ஏன்?' எனில், 'அவை அவர்களுக்குச் சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்டிருக்கின்றன; அம்மாதிரி விதிக்கப்பட்டுள்ள கர்மங்களைச் செய்யாவிட்டால் பகவந் நிக்ரஹம் நேருமாதலால், அவர்கள் அவைகளைச் செய்து வருகிறார்கள்' என்பது தான் அதற்கு ஸமாதாநம். அப்படிப்பட்ட விதி ஒன்றுமில்லாமலும் ஆகைபால் தத்ப்ரயுக்தமான நிக்ரஹத்திற்குக் கோசரமாகாமலும் நிற்கும் ப்ராஹ்மணேதரர்கள் எதற்காக அவைகளில் ப்ரவ்ருத்திக்க வேண்டும்? இது தான் வைதிக கர்மங்களின் ஸ்திதி. இது உண்மையாக இருந்தால், ப்ரக்ருத விஷயத்தில் சுத்தி கர்மத்தின் அநுஷ்டாநத்திற்கு எவ்வித ஆவச்யகதையையும் நாம் காண்கிறோமில்லை. அம்மாதிரி கர்மங்கள் ப்ராஹ்மணேதரர்களுக்குக் கூடாவென்று சாஸ்த்ரம் நிஷேதிப்பது உண்மையானால், நிஷித்தாநுஷ்டாநத்தால் ஏற்படும் பகவந் நிக்ரஹத்திற்கு அவர்கள் பாத்ரமாவது மாத்ரம் பலிதமாகும். மற்றை ஸாமாந்ய ஜநங்கள் போல ஸ்ரீ

சங்ராசார்யரும் இந்த விஷயத்தில் ப்ரமித்து விட்டாரென்றே நாம் நினைக்கிறோம்.

இது ஸம்பந்தமாக இன்னும் ஒரு அம்சம் ஆலோசநார்ஹமாகத் தென்படுகின்றது. அந்த ஹரிணி ஸ்த்ரீ ஸம்பந்தப்பட்டவரையில், அவளைப்பற்றி அவள் சொல்லிக்கொள்வதைத் தவிர்த்து நமக்கு மற்றொன்றும் தெரியாது. அவளுடைய மனோ பாவம் சுத்தமாக இருக்கலாம். வெளிப் பார்வைக்கு அர்த்தமும் காமமும் அவளுடைய ப்ரவ்ருத்திக்குக் காரணமாக காணப்பட்டபோதிலும், அவளுக்கு ஹார்த்தமாக நமது மதத்தில் அபிநிவேசமும் ஒரு காரணமாக இருந்திருக்கக்கூடும்; அது இல்லையென்றும் கேவலம் அர்த்த காமங்களால் மாத்ரம் ப்ரேரிதையாய் அவள் இந்த மார்க்கத்தில் செல்லுகிறாளென்றும் சொல்வதற்குப் போதுமான ஹேது ஸாமக்ரீ இல்லை. அவளை விவாஹம் செய்து கொள்ளும் புமானோ வென்றால், கேவலம் காம ப்ரேரிதனாய் இதில் ப்ரவ்ருத்திக்கிறானென்றே நிச்சயமாகச் சொல்லக்கூடும். அந்தக் காம த்ருப்தியைப் பூர்த்தி செய்து வைப்பதற்காகச் சாஸ்த்ர விருத்தமான கர்மாநுஷ்டாநத்தில் ப்ரவ்ருத்திப்பது அவ்வளவு உத்தமமான கார்யமென்று நமக்குத் தோன்றவில்லை. தவிரவும், இந்தப் புமானுக்கு ஏற்கெனவே இரண்டு ஸ்த்ரீகள் சாஸ்த்ர புரஸ்ஸரமாக பரிணீதர்களாக இருக்கிறார்கள். ராஜ்ய தந்த்ர நிர்வாஹம் அவிச்சிந்நமாக வருவதை உத்தேசித்து நமது சாஸ்த்ரம் ராஜாக்கள் விஷயத்தில் பஹுதார பரிக்ரஹத்தை ஒருவாறு அநுமதித்த போதிலும், ஏகதார வ்ரதனான ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனைத் தைவமென்று கொண்டாடும் நமக்குப் பஹுதார பரிக்ஹம் அவ்வளவு உபாதேயமாகுமோ? தாராந்தர பரிக்ரஹம், பூர்வம் பரிணீதர்களாக இருக்கும் ஸ்த்ரீகளுக்கு அதிமாத்ரம் பாதகமாகுமாதலால், அதில் நாம் ஸம்பந்தப்படுவது அதர்மமே ஆகுமென்றும் நாம் பயப்படுகிறோம். ப்ராக்ருத விஷயத்தில், இப்பொழுது பரிணயம் செய்யப்படும் ஸ்த்ரீக்கு, இந்தப் பரிணயம் ஸர்வதா அநுகூலமாக இருக்குமென்று யாராவது உறுதியாய்ச் சொல்லத் துணிவரோ? இந்த ஸந்தர்ப்பங்களில், ஸ்ரீ சங்காசார்யர் தூஷ்ணீம் பாவத்தைத் ஆச்ரயித்திருந்தால் யுக்தத்தை அநுஷ்டித்திருப்பாரென்பதே நமது அபிப்ராயம்.

*** *** ***

**ஹிந்துமத விவாஹச் சீர்திருத்த பர்யாலோசனை.**

ராய் ஸாஹிப் ஹரவிலாஸ் சாரதர் என்பவருடைய ஹிந்து மத விவாஹச் சீர்த்திருத்த விஷயமான பர்யாலோசனை ஸம்பந்தமாக, டில்லி சட்ட நிருபண ஸபையால் நியமிக்கப்பட்ட உப ஸபையின் அங்கத்தினர்கள் செய்திருக்கும் நிர்ணயம் ஸங்க்ரஹமாகப் பத்ரிகைகளில் ப்ரசுரம் செய்யப் பெற்று வெளி வந்திருக்கின்றது. சாரதரால் செய்யப் பட்டிருந்த ஆலோசனைகளுள் பல அம்சங்கள் உபஸப் யர்களால் மாற்றப்பட் டிருக்கிறபடியால், அந்த ஆலோசனை இப்பொழுது மாற்றப்பட்டிருக்கும் ப்ரகாரம் மறுபடியும் பத்ரிகைகளில் ப்ரசுரம் செய்யப்படுமென்றும், அதன் குண தோஷங்களைப் பரிசீலநம் செய்வதற்காக மஹா ஜநங்களுக்குப் பூர்ணமான அவகாசம் கொடுத்த பிறகே ராஜாங்கத் தார் அதன் நிர்ணயத்தைச் செய்வதற்கு ப்ரவ்ருத்திக்கப் போகிறார்களென்றும் அதன் அதிகாரிகள் சொல்லுகிறார்கள். ஆகையால், அது அவ்வளவு விளம் பாக்ஷமமாக இல்லை என்று ஏற்படுகிறது. நமது சென்னை சட்ட நிருபண ஸபையில் டாக்டர் முத்து லக்ஷ்மி ரெட்டி அவர்களால் விஜ்ஞாபநம் செய்யப் பட்டிருக்கும் பர்யாலோசனையும் கொஞ்ச காலம் விளம்பித்தே நிர்ணயார்த் தம் எடுத்துக்கொள்ளப்படு மென்று நாம் அறிகிறோம்.

டில்லியில் உப ஸப்யர்களால் செய்யப்பட்டிருக்கும் மாறுதல்கள் சாரதருடைய பழைய பர்யாலோசனையைக் காட்டிலும் அதிகமாக ப்ரதி கூலங்களாகவே இருக்கின்றன. பழைய ஆலோசனை ப்ரகாரம் கந்ய கைகளுக்குப் பன்னிரண்டு வயஸ்ஸுக்குக் குறைந்து விவாஹம் செய் விக்கக் கூடாதென்று ஒரு நியமம் சொல்லப்பட்டிருந்தது; மாற்றப்பட் டுள்ள ஆலோசனையில் பதினாலு வயஸ்ஸை அதமாவதியாகச் செய் திருக்கிறார்கள். பழைய ஆலோசனையில், ‘இந்தச் சட்டத்தை மீறி நடந் தால், அப்படிச் செய்யப்பட்ட விவாஹத்தைச் சட்டப்படி செய்யப் பட்ட விவாஹமாக ந்யாயாதிகாரிகள் அங்கீகரிக்கமாட்டார்கள்’ என்று மாத் ரம் சொல்லப்பட்டிருந்தது; இப்பொழுது மாற்றியிருக்கும் ப்ரகாரம், ‘மீறி நடப்பவர்கள் ஒரு மாஸ காலம் சிக்ஷை, ஆயிர ரூபாய் அபராதம் இவைகளுக்கு உள்ளாவார்கள்’ என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இவை யெல்லாவற்றையும் பார்க்கும் பொழுது, நமது சட்ட ஸபையாரின்

நோக்கம் எந்த முகமாக ப்ரவ்ருத்திக்கின்றது என்பது ஸ்பஷ்டமாகிற தன்றோ? சட்டங்களை ஏற்படுத்தும் அதிகாரம் இம்மாதிரியான ஸப்பர்களின் கைகளில் இருக்கும் வரையில், சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டுள்ள விதி நிஷேதங்களுக்கு எவ்விதத்தில் ஆதரம் கிடைக்கக்கூடும்? ஆகையால் நம் மைப் போன்றவர்கள் முறையிடுவதெல்லாம்

“ 𑌅𑌰𑌣𑍍𑌯𑌰𑍁𑌦𑌿𑌤𑌂 𑌕𑍃𑌤𑌂 𑌶𑌵𑌶𑌰𑍀𑌰 𑌉𑌦𑍍𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑌮𑍍 ”

என்பதற்குத் துல்யமாகி விடுமென்றே நாம் பயப்படுகிறோம். இருந்த போதிலும்,

“ [illegible] ”

என்னும் ந்யாயப்படி நமக்குத் தேகத்தில் ப்ராணன்கள் இருக்கும் வரையி லும், அந்த ப்ராணன்களுக்குச் சக்தி இருக்கும் வரையிலும், ‘இது அகார்யம்; இது சாஸ்த்ர விருத்தம்; இது ஜனங்களுக்கு அச்ரேயஸ்கரம்; இது பகவந் நிக்ரஹத்திற்கு ஹேதுவாகும்’ என்று முறையிட்டுக்கொண்டே இருத்தல் வேண்டும். ஸம்பவிக்கப் போகும் ஆபத்தின் கௌரவத்தை அறி யாமல் நமது ஜனங்கள் இது விஷயத்தில் மிகவும் உதாஸீநராக இருக்கிறார் கள். இப்பொழுது, இந்தச் சட்டத்தைத் தடுப்பதற்காக ஜனங்க ளால் செய்யப்பட்டு வரும் ப்ரவ்ருத்தி அதிமாத்ரம் துர்ப்பமலாகவே இருக்கின்றது. ஒவ்வொரு க்ராமத்திலும் ஒவ்வொரு பத்தநத்தி லும் ஜனங்கள் இது விஷயமாகப் பலமுறை கூடி, செய்யப்படப் போகும் சட்டத்தைப்பற்றிப் தமது அபிப்ராயங்களை நிர்ப்பயமாகவும் நிஸ்ஸங்கோசமாகவும் வெளியிட்டு, அந்த அபிப்ராயங்களை ராஜாங்கத்தி லுள்ள சிறிய அதிகாரிகள் முதலாக உயர்ந்த அதிகாரிகள் வரையிலான எல்லா அதிகாரிகளுக்கும் பத்ரிகை மூலமாகவும் மனுக்கள் மூலமாகவும் நேரிலும் தெரிவிக்க வேண்டும். ஆறுமாஸ காலமாவது இடைவிடாமல் இம்மாதிரி மனுக்களின் மேல் மனுக்களாக நாம் செய்து கொண்டால், ஒருகால், ‘இவ்வ ளவு ஜனங்களின் இஷ்டத்திற்கு விருத்தமாக நாம் ஏன் சட்டம் செய்ய வேண் டும்?’ என்னும் எண்ணம் அவர்களுடைய மநஸ்ஸில் உதிக்கலாம். இல்லா

விட்டால் நமது சாஸ்த்ரம் ஹதமேயாகிவிடும். நாமும் மிக்க அச்ரேயஸ்ஸுக்குப் பாத்ரமாகி விடுவோம். இதை மஹாஜநங்கள் கவனிக்க வேண்டும்.

*** *** ***

**இவ்வர்ஷத்திய மஹா ஸங்கம்.**

இவ்வர்ஷத்திய ஸ்ரீ வைஷ்ணவ மஹா ஸங்கத்தைக் கோயம்பூத்தூரில் நடத்துவதாகச் செய்திருந்த ப்ரயத்நம் விக்நிதமாகிவிட்டது. ஸ்ரீ. உப. வெங்கடரமண ஐயங்கார் ஸ்ரீ. உப. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் முதலிய ஆஸ்திகாக்ரேஸரர்களெல்லாரும் இந்த ஸங்கத்தைக் கோயம்புத்தூரில் நடத்திவைப்பதில் மிக்க உத்ஸாஹத்துடன் ஸம்பந்நர்களாக இருந்தும், கார்யம் நிறைவேறுமல் நின்று விட்டதைப் பார்க்கும் பொழுது, இப்பொழுது இந்த ஸங்கத்தை அவ்விடத்தில் நடத்தி வைப்பதில் ஸ்ரீ சரண்யனுக்குத் திருவுள்ளமில்லை யென்றே நாம் நினைக்கிறோம். ஸகல விஷயங்களிலும் அவனுடைய ஸங்கல்பமே நமக்கு ப்ரமாணம்.

இப்பொழுது ஸபையின் அதிகாரிகள், இவ்வர்ஷத்திய ஸங்கத்தை ஸ்ரீ மதுராந்தகத்தில் வருகிற சித்திரை மீ 9, 10 உ களில் நடத்துவதாய் ஆலோசித்திருக்கிறதாக நாம் அறிகிறோம். இது மிகவும் யுக்தமான ஆலோசனையே. அந்த ஸ்தலம், ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் அர்ச்சாரூபியாக எழுந்தருளி யிருக்குமிடம்; ஸ்ரீ ஆசார்யர்களும் அநேக பாகவதோத்தமர்களும் உகந்தருளின திவ்யதேசம். ஸங்கத்தை நடத்துவதாக உத்தேசித்திருக்கும் காலத்தில் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் வஸந்தோத்ஸவம் கண்டருளுவதுடன் ஸ்ரீ பாஷ்யகாருடைய வார்ஷிகோத்ஸவமும் நடைபெறுகின்றது. ஜல ஸம்ருத்திக்கும் எவ்வித குறைவுமில்லை. அநேக ஸ்ரீ வைஷ்ணவ ஆஸ்திகர்களுடைய ஸாந்நித்யமும் கிடைக்கும். இவை யெல்லாவற்றையும் ஆலோசித்து, நாம் அதிகாரிகளால் செய்யப்பட்டுள்ள ஆலோசனையை மிக்க ஆநந்தத்துடன் ஆமோதிக்கிறோம். ஸங்கத்தைப் பற்றிய மற்றை அம்சங்கள் அடுத்த ஸஞ்சிகையில் வெளிவரும்.